முரசொலி
ஆசிரியர்: மு.கருணாநிதி
2 அணா

முரசு 1 | சென்னை | 29 — 10 — 54 | வெள்ளி | ஒலி 31

கழகத் தோழர்கட்கு [3]

# ★ தெருவுக்கொரு சாக்ரடீஸ்! ★

அப்போது நான் ஆரம்பப் பள்ளிக் கூடத்திலே படித்துக் கொண்டிருக்கிறேன். 1934-35-ம் ஆண்டு என்று நினைக்கிறேன்; எனக்கு நன்ருக நினைவிருக்கிறது: ஒரு நடுத்தர வயதுள்ளவர், கையிலேகாங்கிரஸ் மூவர்ணக் கொடியுடன் தன்னந் தனியாக வருவார். தெருவின் ஒரு மூலையிலே நின்றுகொண்டு "வந்தேமாதரம்! மகாத்மா காந்திக்கு ஜே!-போலோ பாரத் மாதாகி-ஜே!" என்ற ஒலிகளை எழுப்புவார். சிறிது சிறிதாகக் கூட்டம் சேர்ந்துவிடும். பிறகு அவர் பிரசங்கம் செய்ய ஆரம்பித்துவிடுவார். ஊர் மக்கள் எல்லாம் ஆச்சரியப்படுவார்கள். இவ்வளவு அரிய கருத்துக்களைச் சொல்கிருரே, என்றல்ல! தடங்கல் இல்லாமல், கட கட வென் இப்படிப் பேசுகிருரே என்று தான் அனைவரும் அதிசயிப்பார்கள். ஒரு அரைமணி நேரம் பேசுவார். பிறகு வேறு தெருவுக்குப் போவார். உணவு நேரத்தில் யாருடைய வீட்டிலாவதுகிடைத்த ஆகாரத்தை சாப்பிட்டுவிட்டுஅடுத்தஊர்போய்விடுவார். அவரை இப்போது மனக்கண்ணால் நினைத்துப்பார்த்தால்ஏறத்தாழ காந்தியாரின் சாயல் உள்ளவராகத் தெரியும். இப்போது அவர் இருக்கிருரோ இறந்துவிட்டாரோ தெரியாது, அப்போதே எங்களுரில் பேசிக் கொள்வார்கள்—"சுயராஜ்யம் கிடைத்து விட்டால் இவரைப் போன்றவர்களுக்கு பிரமாதமான புகழும பெருமையும் கிடைக்கும்" என்று! அப்படி பொன்றும்புகழோபெருமையோ அவருக்கு கிடைத்ததாகத் தெரியவில்லை. கிடைத்திருந்தால்தேசியப் பத்திரிகைகளில் அவர் படமாவது வந்திருக்கும்! பத்திரிகைகளில் அவர் படம் வெளிவருகிற அளவுக்குக்கூடசுயராஜ்யம் அவருக்கு பெருமை தரவில்லை. அப்படிப் புகழ் வராததற்கு ஒரு முக்கிய காரணமும் இருக்கிறது. அவர் ஒரு திராவிடர். அவர்மார்பிலே பூணூலும் மனதிலே ஆரியமும் இருந்திருந்தால்—தென்னாட்டு விநோபா பாவே ஆகியிருப்பார்.

அடிமை மண்ணின் தெருக்களிலே கத்திக் கத்தி, ஊர்களைச் சுற்றிச் சுற்றி வந்த அந்த பரிதாபத்திற்குரிய ஜீவன், என்ன ஆயிற்றோ தெரியவில்லை. ஆனாலும் அவர் செய்து காட்டிய தொண்டு என் மனதைவிட்டு நீங்கவில்லை. கொள்கை பேதமிருக்கட்டும் ஒருபுறம்; கொண்ட கொள்கையில் அவருக்கிருந்த வெற்றியை என்னால்மறந்திடவே முடியாது. தலையிலே ஒரு காந்திக் குல்லாய்-ஒரு வெள்ளை சட்டை—பழுப்புப் பூக்களை ஓரத்திலே பெற்றிருக்கும் ஒரு சால்வை-கையிலே மூன்று நிறக் கொடி.

மறக்கமுடியாத அந்த 'அவர்' உழைக்கும் தோழர்களுக்கு ஒரு வழிகாட்டி. எந்த இயக்கத்தினுமுள்ள தொண்டர்கள்-தோழர்கள்—அவர் போன்ற கடமையுணர்ச்சி பெறவேண்டும், கையிலே கொடி தூக்கி தன்னந்தனியாகச் சென்று ஊர்ஊருக்கும் பிரச்சாரம் செய்வது ஒன்று தான் சிறந்தது என நான் குறிப்பிடவில்லை.

முறை அதுவாக இல்லாவிட்டாலும்—உள்ளம் அவர் போன்றதாய் அமையவேண்டும்-உழைத்திடும் உத்தமர்களுக்கு!

பயன் கருதி அத்தகு பணியில் இறங்கக்கூடாது, பிற்காலத்தில் பெருமையும் புகழும்வருமென்று அவர் பிரச்சாரப் பணியில் ஈடுபட்டார்? இல்லை! சொந்தக்கட்சி மறந்தாலும்கூட, அவரது மாற்றுக்கட்சியாளரின் மனதிலே இடம் பெறுகிறவராக ஆகிவிட்டாரா இல்லையா? தொண்டுக்கு சூட்டப்படுகிற உண்மையான புகழ்மாலை இதுதான்!

நமது கழகம் சில ஆண்டுகளாக கிராமாந்திர மக்களின் மனதில் குடிபுகுந்திருக்கிறது—பிரச்சாரப் படையும், தலைவர்களும் செல்லமுடியாத பட்டி தொட்டிகள் நிறைய இருக்கின்றன. அங்கெல்லாம் நம் நெஞ்சை விட்டகலாத தெருப் பிரசங்கிகள் கிளம்பவேண்டும், ஏதென்ஸ் நகரத்திலே சாக்ரடீஸ் எழுந்தது போல!

கடைத் தெருவிலே—சந்து முனையிலே-நடைப்பாதைகளிலே-குளக்கரையிலே—சிற்ருறுகளின் ஓரத்திலே சிங்காரக் கொல்லைகளின் அருகாமையிலே போவோர் வருவோரை நிறுத்தி வைத்து நீண்ட பிரசங்கம் செய்வானும் ஏதென்சுப் பெரியோன் சாக்ரடீஸ்!

கற்ற பெரியோர்—இளைஞர்—மாணவர்—எத்தனை பேர் வேலைகள் வேண்டாமென பட்டி தொட்டிகளிலே பயிர் பச்சையைக் கவனித்தபடியும்—ஓய்வு நேரத்தை எப்படிக் கழிப்பது என்று தெரியாதபடியும் இருக்கிருர்கள்! அவர்கள் எல்லாம்—தெருப் பிரசங்கிகளாக ஆகலாம். திராவிடத்து மண்ணை தீராத அடிமையிலிருந்து மீட்டிட தீரர் படையைத் திரட்டலாம்.




குக்கிராமத்து இளைஞர்களே! கோழி கூவுகிறது — "விடிந்தது விடிந்தது" என்று! நீங்களும்கூவுங்களேன். "விடுதலை! விடுதலை!" என்று!

"ஏ! பழமையே! பல் இளிக்கும் பகட்டே! அடக்கு முறைகளே! அதிர் வேட்டுக்களே! அடிமைப்படுத்தும்ஆணவமே! அதிகாரத்தின் போதையே! வளர்ந்து வரும் எம்மைப் பார்! இன உணர்ச்சியைஉற்று நோக்கு! அடங்கு! ஆமையாகு! முடங்கு! ஓடிவிடு! கண்ணை மூடிவிடு!"

என்ற எச்சரிக்கை முரசத்தை காது செவிடுபடும் படியாக பட்டிக்காடுகளெங்கும் கொட்டிக்காட்ட வேண்டும், கோணல் புத்திக்காரர்களுக்கு!

[மு. க.]

Best copy available

# புதுவையின் புது வாழ்வு

## டில்லியின் கையில் சிக்குவதேன்?

★

அன்புள்ள குமார்,

உனக்கு கடித மெழுதி ஏறத்தாழ இரண்டு மாதங்கள் இருக்குமென்று நினைக்கிறேன். இந்த இரண்டு மாதங்களுக்குள் அரசியலில் என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் நீ அறிவாய். மகாத்மாவின் பெயரைச் சொல்லி, நேருவின் 'திரு உருவத்'தைக் காட்டி மாவட்டக் கழகத் தேர்தலுக்காக புதுக் கட்சி புகுந்தவர்கள் மண் கவ்விய பரிதாப நிகழ்ச்சிகளை யெல்லாம் பத்திரிகைகளிலே படித்திருப்பாய். எக்காளமிட்ட ராஜா சிதம்பரம் என்ன கதியானார்; ராமசாமி படையாச்சி தன் மனதிலே கட்டிய மண் மாளிகைக்கு 'கிரஹப் பிரவேசம்' நடத்த முடியாமல் மக்கள் சக்தி யென்ற பெரு மழையால் அது கரைந்து மண்ணோடுமண்ணாகப்போனது இவைகளெல்லாம் உனக்கு மகிழ்ச்சி தரக் கூடிய செய்கைகள் அல்லாவிட்டாலும் கடந்த இரண்டு மாத காலத்திற்குள் மின்னல் கொடியாகப் பாய்ந்து உன் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து விட்டுப்போனமாற்றங்களல்லவா! மனு, மந்தாதா மதம், மகேஸ்வரன் என்று புலம்பிக்கொண்டிருந்த உனக்கு மன வேதனை தரும் வேறொரு சம்பவமும் இந்த இரண்டு மாத காலத்திற்குள் நடக்கத்தான் செய்திருக்கிறது.

ஆண்டவனுக்கும் எங்களுக்கும் தொடர்புண்டு என்று சொன்னவர்கள்தான் 'ஐயோ! ஐயோ' என்று கதறிச் செத்திருக்கிறார்கள் என்பதற்கு பல உதாரணங்கள் உனக்குச் சொல்லி யிருக்கிறேன், தலையாயதாக ரமணி 'மகரிஷி'யின் பரிதாப மரணத்தை அடிக்கடி சுட்டிக் காட்டி யிருக்கிறேன். அதைவிட ஒரு சோக நிகழ்ச்சி சுயமரியாதைக்காரர்களுக்கு பிடிமான மானநிகழ்ச்சிஅண்மையில் நடந்ததை நீ மறந்திருக்க முடியாது. சிருங்கேரி மடத்து குரு தன்னை ஒரு தேவப் பிறவியாக நினைத்திருந்தவர்—இல்லை—பிறர் நினைக்கவேண்டுமென்றுஆசைப்பட்டு அதற்கான வேடமிட்டு வசனங்களை மனப் பாடமாக ஒப்பித்துக் கொண்டு வந்தவர்—அவர் என்னவானார்? எப்படிச் செத்தார்? ஆண்டவர்களுக்கு இருந்ததாகச் சொல்லப்படுகிற ஆகாய வாகனங்களா வந்து சிருங்கேரி யாரை இட்டுச் சென்றது? ஆற்று வெள்ளத்தின் நீர் சுழலிலே சிக்கி ஆற்றோணுத் துயரமடைந்தல்லவா அவர் செத்தார்—இது கண் கூடாகப் பார்த்த உண்மை நிகழ்ச்சி குமார். சிருங்கேரி மடாதிபதி செத்தது குறித்து என் சித்தம் குளிர்ந்ததாக எண்ணி விடாதே; அவருடைய சாவு—இயற்கைக்கு முரணான சாவு—பக்தர் குலாத்திற்கு பலத்ததோர் சம்மட்டி அடி என்பதற்காக இதைச் சொல்லுகிறேன். இவைகளெல்லாம் கடந்துபோன நிகழ்ச்சிகள்—நீ எண்ணிப் பார்க்க வேண்டுமென்பதற்காக நிழற்படமாக ஒரு முறை ஓட்டிக் காட்டினேன். நான் இந்தக் கடிதத்தின் மூலம் உனக்கு சொல்ல நினைத்த விஷயத்திற்கு இப்போதுதான் வருகிறேன்.

நவம்பர் மாதம் முதல் நாளன்று புதுவை மண்ணில் தனியாட்சி நடத்திக் கொண்டிருந்த பிரஞ்சுத் தனவந்தர்கள் பாரிஸ் நோக்கி பயணப்படுகிறார்கள். காலனி ஆதிக்கம் ஒழிவது களிப்படையக்கூடிய விஷயம்தான். அதுவும் சுதந்திரக் குடியரசு என்று சொல்லப்படுகிற இந்த இந்தியத் துணைக் கண்டத்தின் மத்தியிலே, உள்ளங்கை அளவு பூமியை கடல் கடந்து வந்து ஒரு கூட்டம் ஆதிக்கம் செலுத்துவதுஎன்பது யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாதது என்பது உண்மையே! ஆனால் அவர்களை லஞ்சம் தந்து போகச் சொல்லுவதைப்போல, மூன்று கோடி ரூபாயை அள்ளிக் கொடுத்து போகச்சொல்லுவதை நீ ஏற்றுக் கொள்ளுகிறாயா? புதுச்சேரியை அந்த பிரஞ்சுக்காரர்கள் வேட்டைக் காடாக பாவித்ததுமல்லாமல் அவர்களுக்குமேற்கொண்டு வேறு பொருளா? டூப்ளேயின் சொந்தக்காரர்களுக்கு கொட்டியழுதுள்ள ரூபாயை ஈடுசெய்ய இந்த சர்க்கார் எந்தெந்தஉருவில் வந்து மக்களை உருஞ்சுகிறதோ தெரியவில்லை. அதுமட்டுமல்ல குமார், பிரஞ்சுக்காரர்கள்போனதோடு 'புதுவை பிரச்னை, தீர்ந்துவிடவில்லை. மயிலாடும் தமிழ் சோலையிடையே பிரஞ்சுக்காரர்கள் போட்ட திரை விலக்கப்படப் போவதாகத் தெரியவில்லை. 'டூப்ளேக்குப் பதிலாக கேவல்சிங் நடமாடுவார் அவ்வளவுதான்! 'அன்புள்ள தோழா, புதுச்சேரி மக்களில் பெரும் பகுதியினர் தமிழ் பேசுவோர்—அந்த உயர் தனிச் செம்மொழியையே தாய் மொழியாக கொண்டவர்கள். அவர்களை அடக்கியாண்ட வேற்று நாட்டுக்காரன் கப்பலேறுகிறான் என்றால் விடுபட்ட மக்களை தாயகத்தோடு சேர்த்து விடுவது தானே முறை! நேருத் திருமகனாரின் நேரடிப் பார்வையிலே நடைபெறும் இந்த ஆட்சி பீடம் புதுச்சேரியை 'சி' பிரிவு மாநிலமாக்கி—தனி மாநிலமாக்க நினைக்கிறதாம். கேவல்சிங் கவர்னராக நியமிக்கப்படாலாமென்று தெரிகிறது. இதற்கொரு புதிய சமாதானம் கூறப்படுகிறது. மக்கள் மனதை அறியாமல் ஆட்சி முறையிலே புதியமாற்றம் காண இந்திய சர்க்கார் விரும்பவில்லையாம்! இவ்வளவு காலமாக மக்கள் குரலை மதித்து(?)வந்த மேன்மை தங்கியவர்கள் சொல்லுகிறார்கள். தென்னாட்டு மக்களின் வியர்வை இன்னொரு பத்து லட்ச ரூபாயாக வடிவெடுத்து 'வேறொரு பிரகாசா'வுக்கு போய்ச் சேர வேண்டுமென்று தயாரிக்கும் டில்லியின் திட்டத்தை நீ ஆதரிக்கிறாயா? மக்களின் மனோ நிலையை அறிய எவ்வளவு நாளாகிவிடும்? அதற்கு ஏன் காலம் கடத்த வேண்டும்? இதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாயோ தெரியவில்லை, என்னைப்பொறுத்தவரை பிரஞ்சுக்காரர் பாதத்திற்குப் பதிலாக வடவர் பாதம் அந்த பூமியில் பதிகிறது என்றுதான் கருதுகிறேன்.

அன்பு

**பொன்முடி**

# தீபாவளிப் பரிசு!

[ குடும்பச் சித்திரம் ]

நாளைமறு தினம் தீபாவளி. விளக்கேற்றக் கூட வகையில்லை. வள்ளி கண்கலங்கி நின்றாள். பணம் தேட, பரமன் வீட்டை விட்டுச் சென்று ஒரு வாரமாயிற்று, சிறுவன் சிங்காரம் துடித்தான், மாடி வீட்டு மோகனன் பட்டாசு கொளுத்தியதைப் பார்த்து.

'வள்ளி, வள்ளி கேட்டியா சேதியை! போலீஸ்காரர்கள் பரமனை பிடித்து போகிறார்கள். நல்ல அடி, உடம்பெல்லாம் ரத்தம்.' வள்ளியின் உழவுத்தோழி ஓடி வந்து சொன்னாள். வள்ளி விழுந்து, விழுந்து புரண்டாள். கதறினாள், கண்ணீர் வடித்தாள். 'பாழாப்போன தெய்வமே. தீவாலிக்குத் தந்த பரிசா இது?' எனக் கதறினாள்.

மறுநாள் காலை. பரமன் நீதி மன்றத்திலே விசாரிக்கப்படுகிறான். "நான் மானஸ்தனுங்க. திருடரதை அவமானம்னு நெனைக்கிறவன். பச்சைக் குழந்தை மழையிலே நனையிதேன்னு தூக்கிக் கொண்டு வந்தேனுங்க. அது என்ன நகை போட்டிருந்ததுன்னு கூட எனக்குத் தெரியாதுங்க, யாரு செஞ்ச வினையோ என்னைப் புடிச்சுக் கிட்டதுங்க" என்றான்.

"நீ யோக்கியன் என்பதற்கு சாட்சியமில்லையேப்பா!

"இந்த ஏழைக்கு ஆண்டவன் தான் சாட்சி"

"நடக்கக் கூடியதாக பேசப்பா வாயிலேவந்ததையெல்லாம் உளறி கொட்டிக் கொண்டிருக்கிறாயே." என்று கூறி பரமனுக்கு மூன்று மாத கடுங்காவல் தண்டனை விதித்தார். "ஒரு முறை என் மனைவியையும், குழந்தையையும் பார்த்திடுரேனுங்க. கொஞ்சம் கிருபை வையிங்க' என்று பரமன் நீதிபதியிடம் கெஞ்சினான். அப்போது பரமன் எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நிகழ்ந்தது. வள்ளியையும், சிறுவன் சிங்காரத்தையும் இரண்டு போலீஸ்காரர்கள் கூட்டிவந்தார்கள்.

"வள்ளி! வள்ளி!!"

"மச்சான்!"

"ஏன் வள்ளி? ...எந்தக் குழந்தையைக் காப்பாற்றினாய்?" — ஆத்திரத்தோடு கேட்டான்பரமன். போலீஸ்காரர்கள் அதட்டினார்கள். பரமனின் கண்களிலிருந்து சொட்டுச்சொட்டாகக்கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

வள்ளியை நீதிபதி விசாரித்தார். "எனக்கு வாழப் பிடிக்கல்லெ எசமான். செத்துப் போயிடலாம்னு நெனைச்சு விஷத்தை குடிச்சேனுங்க"

"அது பெருங்குற்றமாயிற்றே"—நீதிபதி.

"வாழத்தான் வகையில்லே னுபாத்தா சாகக் கூடவா படாது. நல்லாருக்கு எசமா உங்க சட்டம்".

"உ... ஸ்... ஸ்...மூடு வாயை! தற்கொலை குற்றத்திற்காக உனக்கு ஆறுமாத கடுங்காவல் தண்டனை விதிக்கிறேன்." என்றார் நீதிபதி.

வள்ளி மச்சான், மச்சான் என்று கதறினாள். அதற்குள் பரமனை மோட்டாரில் கொண்டு போய் விட்டார்கள், சிங்காரமும் வள்ளியும் போலீஸ் மோட்டாரில் சிறைக்கு கூட்டிப் போகப் பட்டார்கள். வழியிலே பட்டாசு கடைகளையும், பட்டாடை உடுத்தியவர்களையும் அவர்கள் பார்க்காமலில்லை.

One side of the page is dark

# தலையங்கம்

சென்னை [ 29—10—54 ] வெள்ளி

## 'பிள்ளை' பிடிக்கிறார்கள் !

பச்சைக் குழந்தையிடம் பல்லிளித்து, பாகுமொழி பேசி, பின்னர் அந்தப் பிள்ளைக் கனியமுதைக் கவர்ந்து செல்வர், பகல் வேஷக்காரர்கள், சிலர்! அதற்காக அந்த சிசுவைஅழைத்து கள்வனின் பேச்சுக்கு ஏன் மயங்கினாய் என்று கடிந்து கொள்வதைவிட, அந்த பிள்ளைபிடிக்கும் கயவனைத்தான் நன்றாகக் கண்டிப்பர்; கடுமையான தண்டனையும் வழங்குவர், விவேகம் தெரிந்தோர்!

பிள்ளைபிடிக்கும் அந்தக் கள்ளர்கள் நிலையிலேதான் மூன்று வர்ணக் கொடிகொண்டு, ஒரு காலத்தில் நாட்டவர் நெஞ்சிலெல்லாம் குடிகொண்டிருந்த காங்கிரஸ் இயக்கமும் தற்போது செயலாற்றி வருகிறது. கார்கண்ட மயில்போல மக்களெல்லாம் மகிழ்ச்சியின் வசமாகி நின்றனர்; முன்னைய பொதுத் தேர்தலிலே பாசிச காங்கிரசின் வாரிசாய் நிற்பவரெல்லாம் ஒருவர்பின் ஒருவராய் மண்ணைக் கௌவியது குறித்து! ஆனாலும் விரைவிலே அந்த நிலைமை மாறி விட்டது. மக்கள் சக்தி காறி உமிழ்ந்தோரையும், காலால் மிதித்தோரையும் 'கனம்'களாக்கி கொக்கரித்து நின்றது, காங்கிரஸ்! சட்டசபைக் கூடத்துள் நுழைவதையும், 'குஷன்' பதித்த மந்திரி நாற்காலியில் ஒரு நிமிஷமாவது உட்கார வேண்டியதையுமே வாழ்க்கையின் லட்சியமாகக் கருதியவர்கள்தான் எத்தனையோ பேர் இருக்கிறார்களே! அவர்களையெல்லாம் அருகழைத்து, பதவியென்னும் தேங்காய்த் துண்டங்களை வீசி எறிந்து தன் பக்கம் கவர்ந்துவிட்டது, காங்கிரஸ்—பிள்ளைபிடிக்கும் எத்தர்களைப்போல! பிறந்த வீடாம் தங்கள் தொகுதிக்குள் திரும்பவும் தலைகாட்ட முடியாதே என்பதை மறந்துவிட்ட 'குழந்தை'கள் சிலவும் காங்கிரசின் அரவணைப்பிலே இக, பர, சுகமனைத்தையும் ஒருங்கே சுவைத்ததாக மனப்பால் குடித்து நின்றனர்.

வளர்ந்துவரும் ஜனநாயகம் 'வன்கணாளர்'களால் இப்படி சித்ரவதை செய்யப்படுகிறதே என்று நாமெல்லாம் சிந்தை கலங்கினோம்‧ கள் மொந்தையில் ஈயாய் காங்கிரசோடு கலந்துவிட்ட மக்கள் துரோகிகள் எதற்கும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. கட்சியின் பெயர் கெட்டாலும் பரவாயில்லை; ஆட்சி பீடத்திலே தங்களுக்கொரு இடம்மட்டும் நிலைத்திருந்தால் போதுமென்ற தேசியத் தோழர்கள்கூட நல்லநாள் பார்த்து இந்தத் துரோகிகளுக்குப் புதுக்கதர் உடுத்தினர்.

உடைமாற்றுதல் போல, கட்சிமாறும் இந்த கண்யவான்களின் தொகையை குறைத்துக் கொண்டு; இழந்துபோன பெருமையை மீண்டும் நிலைநாட்டிக் கொள்ளும் அவசியத்தை காங்கிரஸ் இன்னமும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. துரோகிகளைப் பெருக்கி, ஜனநாயகத்துக்கே மாபெரும் துரோகம் செய்யும் அவர்களது திட்டத்தை காங்கிரஸ் பொதுக் காரியதரிசி பலவந்தராய் மேத்தாவே வெளியிட்டிருக்கிறார்; சுற்றறிக்கை வா லாக! அது, இதோ!

சட்டசபைக் காங்கிரஸ் கட்சியில் நாலில் மூன்று பங்கு மெம்பர்கள் சாதகமாக வோட்டளித்தாலே போதும்; சுயேச்சை வாதிகளையோ அல்லது இதர அரசியல் கட்சியின் பிரதிநிதிகளையோ காங்கிரசில் சேர்த்துக் கொள்ளலாம்.

தொண்டு செய்வதொன்றையே நல்வாழ்வெனக் கொண்டு வாழ்ந்த காந்தியாரும், ஏனைய தலைவர்களும் இருந்த காங்கிரஸ், இன்று துரோகிகளின் துணைகொண்டு வாழவேண்டிய நிலையைப் பாருங்கள்! "காளை மாட்டுப் பெட்டியிலே ஓட்டுப் போடாதீர்கள்; மூளியாகிவிட்ட உங்கள் வாழ்வு துவங்க சுயேச்சையாகிய எனக்கே ஓட்டளியுங்கள்"—என்று மக்கள் மன்றங்களிலே கதறியவர்கள்; "மாட்டுக்கு ஓட்டளித்தால் கொஞ்சம் பசுமையாய் இருக்கும் நம் நாடும் பாலையாகிவிடு"மென்று, கையிலே ஓடேந்தி வீடுவீடாய் ஓட்டுப் பிச்சை கேட்டவர்கள்;—காங்கிரசை எதிர்த்த இந்த வீராதி வீரர்களெல்லாம் சட்டசபை நுழைந்ததும் மீண்டும் காங்கிரசோடு கொஞ்சிக் குலாவலாமாம்; அதற்கு சட்டசபைக் காங்கிரசில் 4-ல் 3-பங்கு சம்மதம் கிடைத்தாலே போதுமாம்! பொது மக்களின் சம்மதம் தேவையே இல்லையாம்!

என்ன செய்வது? காட்டெருமைகள் சேற்றிலே உழல்வதைத் தானே இன்பமாக நினைக்கின்றன! காங்கிரசென்னும் சேற்றைப் பூசி மகிழும் துரோகி எருமைகளும், அந்த எருமைக் கொட்டடிக்கே அழைக்காமல் வந்துசேரும் சேற்றுத் திரளும் இந்த நாட்டு அரசியலில் அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன.

" காங்கிரசோடு சேர்ந்துவிட்டேன்; கட்சியைக் கலைத்து விட்டேன் " —இந்த அறிக்கைகள் பெருக வழி அமைத்துக் கொடுப்பதற்காகத்தான் இப்போது பலவந்தராய் மேத்தா காங்கிரசின் சட்டத்திட்டத்திலே புதியதொரு ஷரத்தைச்சேர்த்திருக்கிறார். காங்கிரசைஎதிர்த்து வெற்றிபெற்றவர்களை திரும்பவும் காங்கிரசில் சேர்த்துக் கொள்ளலாமாம்; சிறிதளவும் வெட்கமில்லாமல்சொல்லுகிறார்பலவந்தராய்மேத்தா!

ஓட்டுச் சாவடியின் முன்பு நீ மக்களிடம் எடுத்துச் சொன்ன வாக்குறுதிகள் என்ன? நீ அவைகளை யெல்லாம் காற்றிலே பறக்க விட்டு விட்டு எங்களோடு சேருவதுகண்ணியம்காக்கும் செயலாகுமா? —என்று சிம்மக்குரலெழுப்பி சிறுமதியாளரைத் தட்டிக் கேட்க வேண்டும். காங்கிரஸ் நாகரிகமான அரசியல் கட்சியென இந்நாட்டு சரித்திரத்தில் இடம்பெற விரும்பினால் அப்படித்தான் செய்திருக்க வேண்டும். அஃதன்றி 'பிள்ளைபிடிக்கும்' துட்டனின் நிலையிலே, உனக்கு அந்த உதவி செய்கிறேன்; இந்தப் பதவி தருகிறேன் என்று ஆசை வார்த்தைகள் உதிர்த்து, உதிரிகளையெல்லாம் 'தத்து' எடுக்கும் நிலையை வளர்த்துக் கொண்டே போனால், உலகின் ஏனைய ஜனநாயக விரோதிகளின் முடிவைத்தான் 'இவர்களும்' அடைய வேண்டியிருக்கும்; என்பதை நம்மால் எச்சரிக்காமலிருக்க முடியவில்லை.

நப்பாசைகாட்டி— 'கட்சிமாறிகளை' கூட்டுச் சேர்க்கும் காங்கிரசின் திருட்டுப்பண்பும், அவர்களின் மயக்கு மொழியிலே மதியிழந்து, திசை தவறிப்போகும் துரோகிகளின் குழந்தை மனப்பான்மையும் பொதுமக்களின் கண்டிப்புக்குரியவை.

தசரதபுத்திரனால் கல்லும் காவேரியும், புல்லும் பூமியுமுள்ள அளவு ஆயுசும், சிரஞ்சீவிப் பட்டமும் வழங்கப்பட்ட அந்த விபீஷணன் ராஜ்யமே இருந்தவிடம் தெரியாமல் அழிந்துவிட்டது. இப்போது பலவந்தராய் மேத்தா ஆசீர்வதிக்கும் இந்த விபீஷண ராஜ்யம்மட்டுமோ நிலைத்து நிற்கப்போகிறது?—வளர்ந்துவரும் மக்கள் சக்தி விபீஷணர்களுக்கும், அவர் தம் போஷகர்களுக்கும் விரைவில் சரியானதோர் பாடத்தை கற்பிக்கத்தான் போகிறது.

# குறளோவியம்

*காதலர் பிரிந்து விட்டால் காதலியின் மேனியிலே பசலை நிறம் பாய்கிறதாம். பசப்புறு பருவரல் என்னும் அதிகாரத்தில் வள்ளுவனார் அந்தப் பசலை நிறத்திற்கு அடிமையான பாவையரின் வேதனைகளை மிக அருமையாக சித்தரித்திருக்கிறார்.*

*மஞ்சத்திலே கொஞ்சு மொழிகள் உதிரும்-ஆடல் பாடல்-ஊடல்-கூடல்-எல்லாமே ஒன்றையொன்று போட்டியிடும். காலையிலே எழுந்திருந்து கண்ணாடி பார்க்கும் தலைவி, கண்ணாடியிலிருப்பதும் தன் உருவம் தான் என்பதை மறந்து விட்டு, திடீரென்று, தன் கன்னத்தை மூடிக் கொள்வாள். பிறகு தான் அவளுக்கு நினைவுவரும்; எதிரேயிருப்பது கண்ணாடி-அதிலே தெரிவது தன் உருவம் என்று! யாரும் தன் கன்னத்தைப் பார்த்து விடவில்லை யென்றே திருப்தி ஏற்படும் அவளுக்கு-ஒவ்வொருவருநாளும் காலையிலே இப்படி ஒரு நிகழ்ச்சியை சமாளித்துத் தீர வேண்டியிருக்கிறது என்று தெரிந்தும் கூட, இரவு நேரத்திலே அவள் அதைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொள்வதுமில்லை, முன்ஜாக்கிரதையாக இருப்பதுமில்லை, அதனால். கன்னத்திலே பசலைநிறம்பாய்ந்தஒரு வட்டம் உதயமாகி விடுகிறது. யாராவது பார்த்து விடுவார்களே என்ற வெட்கம் இருந்தாலும் கூட, அந்தக் கன்னத்தை அவள் தனக்குள்ளாக ரசிக்கத்தவறுவதில்லை. மெல்லிய விரல்களால் தடவிப் பார்த்து-ஏதோ ஒரு நடந்து போன நிகழ்ச்சியை எண்ணி. அவளாகவே சிரித்துக் கொள்கிறாள். யாராவது வந்தால், கன்னத்தைத் தடவுவது போல மறைத்துக் கொள்கிறாள் வந்தவர் போனதும், கண்ணாடியில் கன்னத்தைக் கண்டு களிப்படைகிறாள். காதலன் பொறித்த முத்திரை அவள் கண்ணுக்கு விருந்தூட்டி, கருத்துக்கும் இனிமை சேர்க்கிறது.*

*இவளைப் போலவே. ஒரு எழிலரசியைபேச வைக்கிறார் திருக்குறளார். காதலன் பிரிந்து விட்டான் காதலியிடம் விடை பெற்று! நிலவு போனதும் வானத்திற்கு இருள் நிறம் வருகிறதே அதுபோலவே இந்த நேரிழையாளுக்கும் பசலை நிறம் மேனியில் பரவி விடுகிறதாம். அந்தப்பசலை நிறம் தன் உடலில் ஏற்ப்பரவுவதை அவள் காண்கிறாள். காதலரின் பிரிவால் அல்லவா இந்நிறம் ஏற்பட்டது என வருந்துகிறாள். அதேசமயம் அந்த வேதனையிலும் அவளுக்கோர் பெருமிதம் ஏற்படுகிறது.*

*கன்னத்தில் அடையாளம் பெற்ற காரிகை. வெட்கத்தால் வேதனையுற்றாலும், அது தன் காதலன் தந்த அடையாளம் என எண்ணி மகிழ்கிறாளே; அதுபோலவே இவளும் பிரிவுத்துயரால் என் உடலில் பாவும் இந்த நிறம், என் காதலரால் ஏற்பட்டது என எண்ணுவது பெருமைக்குரியது என்கிறாள். அந்தக்குறள் இது:-*

" அவர் தந்தார் என்னும் தகையால் இவர் தந்து என்
மேனிமேல் ஊரும் பசப்பு. " — கருணா

### சக்கரவர்த்தியின் திருமகன்

# ராமன் ஓர்

காடேகிய ராமன், சீதை இலக்குமணன் மூவரும், பரத்துவாசருடைய ஆசிரமத்தில்ஒரு ராத்திரி படுத்துத் தூங்கிவிட்டு, காலையில் எழுந்து சித்திரகூட மலைக்குப் புறப்பட்டார்கள்.

நாடாளக் கூடாது என காடாள விரட்டப் பட்டார்கள் ராமனும் சீதையும் என்று சொல்லும்போது, ராம கதையைப் படிப்பவரும் கேட்பவரும் சோகத்தில் ஆழ்ந்துவிடுவதைக் கண்டிருக்கிறோம். காடு, மிக பயங்கரமான தனியிடம் போலவும் எந்நேரமும் துஷ்ட மிருகங்களின் அட்டகாசங்களும், அவைகளிடமிருந்து மீள வேண்டுமென்று விநாடிக்கு விநாடி போராட்டங்களும், கண் இமைக்க முடியாமல், எந்த நேரத்தில் எந்த ஆபத்து வருமோ என்று அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கவேண்டிய சூழ்நிலையும், வாய்ந்ததாக இருக்குமென்றும், அதிலே ராமன் குழுவினர் எப்படித்தான் வேதனை அனுபவிப்பார்களோ என்றும் யாராவது கவலைப்பட்டால் அது தவறுதான் என்பேன். ராமன் முதலியோர் இருந்த இடம் அப்படியொன்றும் பயங்கரமாக வர்ணிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. வர்ணித்தாலும் வர்ணிக்காவிட்டாலும், ராமனோ, இலக்குமணனோ – ஒரு புலியை எதிர்த்துப் போரிட்டார்கள் - சிங்கத்தைக் கொன்றார்கள் – மதயானையை விரட்டினார்கள் - என்றெல்லாம் காட்டு நிகழ்ச்சிகள் எதுவும் ராமாயணத்தில் வருவதாகவும் தெரியவில்லை. மானைப் பிடிப்பதற்காக ஒரு சமயம் ராமன் ஓடினான் என்று இருக்கிறது — அதுவுமின்றி, முனிவர்கள் பலர் ஆஸ்ரமங்கள் அமைத்துக்கொண்டு கானகங்களில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்றும் ராமாயணக்கதை கூறுகிறது - "தாருகாவனத்து ரிஷிபத்தினிகள்" என்று நாம் படித்திருக்கிறோமே — அந்த வனத்தில் ரிஷிகள், மனைவிமாரோடு, சிறிய கிராமமே அமைத்துக் கொண்டு வாழ்ந்திருக்க வேண்டும் போலும் - இவைகளையெல்லாம் பார்க்கும் போது, மனித சஞ்சாரமேயற்ற ஒரு வனப்பிரதேசத்தில் ராமனும் சீதையும் கொண்டுவந்து விடப்பட்டார்கள் என்று கூறுவதற்கில்லை.

இன்னும் சொல்லப்போனால் நாடு கிடைக்காத ராமன் - பரதனை ஏமாற்றி நாட்டைப் பெறலாம் எனத்திட்டமிட்டு ஏமாந்ததும் - மறுபடியும் பரதனுக்குக் கீழேயிருந்து ராஜ்ய காரியங்களைக் கவனிப்பதைக்காட்டிலும் எந்தத் தொல்லையுமில்லாமல் - மனைவியுடன் கானகத்தில் இன்ப கீதம் பாடிக்கிடக்கலாம் என்று எண்ணியிருப்பான் - காட்டின் அவன் அப்படி எண்ணியதிலே தவறில்லையென்றும் தெரிகிறது.

காட்டுப் பாதையில் அவர்கள் செல்லும்போது, சீதை ஒரு ஆலமரத்தடியில் உட்கார்ந்து பூஜை செய்யத் தொடங்கியதை ஆச்சாரியார் படம் பிடித்திருக்கிறார். சீதையின் பிரார்த்தனையைக் கேளுங்கள்.

"என் புருஷனுடைய விரதம் முடிவடைய வேண்டும். மரமே கௌசல்யை – சுமத்திரை இவர்களை நான் திரும்பப் பார்க்கும்படி அருள்வாய்!"

மகாலட்சுமியின் அவதாரம், மரத்தடியில் உட்கார்ந்து "ஏ, மரமே!" என அழைத்து பிரார்த்தனை செய்கிறது. ஆச்சாரியாரைக் கேட்டால், அவதாரமானாலும் அவர்கள் - "மனுஷ்ய உள்ள"த்திலேதான் இருக்கிறார்கள் என்று பதில் கூறுவார். அப்படி எழுதியுமிருக்கிறார். இதுபோன்ற இடங்களில் மனுஷ்ய உள்ளம், அல்லது மனிதர் அனுபவிக்கும் இன்பதுன்பங்களை அனுபவிக்கும் தன்மை, என்றெல்லாம் காணும் ஆச்சாரியார், ராமன், பெரும் பெரும் வீரர்களை தாடகை போன்ற சக்தி வாய்ந்தவர்களைக் கொல்லும் போதும் - வில்லை ஒடிக்கும் போதும் "ஆகா அவதார புருஷனல்லவா - ஆகவேதான் இச்சக்தி பெற முடிந்தது!" என்று பாராட்டவும் தவறவில்லை. ஒரே முரண்பாடு! ஒரே முரண்பாடு!

சரி; அவர் கூறுகிறபடி ராமர் சீதை முதலிய அவதாரங்கள் சரியான மனிதப் பண்பை யாவது பெற்றிருந்தார்களா? - இல்லை! நிச்சயம் இல்லை!

ஆலமரத்தடியில் அமர்ந்து பிரார்த்தனை செய்யும் சீதையின் திருவாய் சிந்தும் வார்த்தைகள் என்ன?

"திரும்பிவந்து, கௌசல்யை சுமத்திரை இவர்களை நான் திரும்பப் பார்க்கும்படி அருள்வாய்!" இதுவே அவள் பிரார்த்தனை!

கௌசல்யா ராமனின் தாயார், சுமித்திரை, லட்சுமணனுக்கும் சத்ருருக்கனனுக்கும் தாயார் - அவர்கள் இருவரையுமே அவள் பார்க்க வேண்டுமாம். கைகேயி செத்தாலும், அழிந்தாலும் அவளுக்கு அதைப்பற்றிக் கவலையில்லையாம்! - என்னதான் சீதையின் நினைப்புப்படி கைகேயி கெட்டவளாகயிருந்தாலும், சீதை ராமன் முதலியோருக்கு பரதன் நல்லவனுயிற்றே - அந்த நல்லவனின் தாயார் சாவதைபற்றிசீதைக்குசந்தோஷமே!

அதனால்தான் கௌசல்யா, சுமித்திரை இருவரையும் திரும்பப் பார்த்தால் போதுமென்று வேண்டுகிறாள் - இதிலிருந்து தெளிவாக விளங்குகிறது; ராமன் கோஷ்டிக்கு பரதன் கோஷ்டியின்மீது எவ்வளவு வெறுப்பு பரதனுக்குப் பட்டம் என்பதற்கு தலையசைத்து, தங்களையும் காட்டுக்கு அனுப்பிவிட்டார், என்பதற்காக, சீதை - தனது அருமை மாமன் தசரதனைக்கூட திரும்பச் சென்று பார்க்க வேண்டுமென்று ஆலமரத்தடியில் பிரார்த்திக்கவில்லை. மாமனார்மீது இந்த நல்ல (?) மருமகளுக்கு அவ்வளவு பிரியம்!

(தசரதன் இன்னும் சாகவில்லை என்பதை வாசகர்கள் மறக்க வேண்டாம்)

பிரார்த்தனை முடிகிறது— ராமன் தம்பியைப் பார்த்து, "லஷ்மணா! நீ முன்னால் சீதையுடன் செல்வாய்! நான் பின்னால் ஆயுத பாணியாய் நடப்பேன், வழியில் அவள் கேட்கும் பூவோ, பழமோ, எதை இஷ்டப்பட்டாலும் அதைப் பறித்துக் கோடுத்து, அவளை உற்சாகப் படுத்திக் கோண்டே நடப்பாய்!" என்கிறான் — ஆச்சாரியார் எழுதியிருக்கிறார்.

காட்டில் ஏதாவது மிருகங்கள் வருகிறதா — பாம்பு முதலியன தென்படுகிறதா — என்று முன்னால் பார்த்துக் கொண்டு போனால் தான் பின்னால் வருகிறவர்களைத் தப்புவிக்க முடியும். ராமனோ, ஆயுதபாணியாக பின்னால் வருகிறேன் என்று கூறுகிறான். இதன் பொருள் நமக்கு விளங்கவில்லை. ஒரு வேளை சீதையின் மீது பின்னாலிருந்து ஏதாவது மிருகங்கள் பாய்ந்து விடலாமென்று கருதி — அப்படி எதுவும் நடந்து விடாமல் புருஷனாகிய ராமன், தம்பியைக்

# "மாமிச பக்ஷணி!"

[மூக்காஜி]

கூட நம்பாமல், தானே பின்னேயிருந்தபடி கண்காணித்துக் கொண்டு நடந்தானோ என்னவோ — தெரியவில்லை! - ஆனால் ஒன்று, ராமன் ஒரு சந்தேகப் பேர்வழி என்பது மட்டும் ராமாயணத்தில் விளக்கப்படுகிற ஒரு செய்திதான்! நிற்க, ஆச்சாரியார் இன்னும் எழுதுவதைக் கவனிப்போம் —

இவ்விடத்திலும், இன்னும் பல விடங்களிலும் ராம லக்ஷ்மணர் வேட்டையாடி, பூஜைக்குத் தகுத்த — அதாவது வழக்கப்படி சாப்பிடத்தகுந்த — வேட்டை யாகாரம் சம்பாதித்து உண்டார்கள் என்று வால்மீகி முனிவர் எழுதியிருக்கிறார். இதைப் பற்றி நாம் குழப்பமடைய வேண்டியதில்லை. க்ஷத்திரியர்களின் ஆசாரப்படி, மாமிச ஆகாரத்தில் குற்றமில்லை. காலத்துக்கும் குல வழக்கத்துக்கும் ஏற்றபடி உடலைப் பாதுகாப்பதற்காக எந்த உணவும் தக்க வழியில் சம்பாதித்து பூஜையில் வைத்து அளவுக்கு மிஞ்சாமல் உண்பதில் யாதொரு தவறுமில்லை என்பது பாரத தேசத்துப் பொது தருமம்!' அக்டோபர் 10-ம் நாள் கல்கி இவ்வண்ணம் எழுதியிருக்கிறார்.

ராமன் முதலியோர் மாமிசம் சாப்பிட்டனர் — மது உண்டனர் — என்று நாம் மேடைகளில் கூறிய பொதும், ஏடுகளில் எழுதிய போதும் — அவதார புருடனை அவதூறு கூறுவதே — நாக்கு அழுகிவிடும் என அர்ச்சித்த பக்த கோடிகள் — ஆச்சாரியாரின் இந்த விளக்கத்திற்கு என்ன பதில் கூறுவார்களோ; தெரியவில்லை!

வால்மீகி ராமாயணத்தைப் பெரும்பாலும் மறைத்து விட்ட காரணத்தால் தான், ராமனின் உண்மை உருவம் மக்களுக்குத் தெரியாமல் போய் விட்டது என்பதை இனியாவது நமது கருத்தை எதிர்ப்போர் உணர்வார்களா, என்று கேட்கிறேன்.

ஆச்சாரியார் வாசகத்தை மீண்டும் படியுங்கள். "பூஜைக்குத் தகுந்த, அதாவது வழக்கப்படி சாப்பிடத் தகுந்த"

இதிலிருந்து என்ன தெரிகிறது! — பூஜை என்பதற்கு சாப்பாடு என்று பொருள் என்ற உண்மை தெரிகிறது. அது மட்டுமல்ல; "வழக்கப்படி சாப்பிடத் தகுந்த" ஆகாரமும் கிடைக்கிறது அவர்களுக்கு! அதாவது அரண்மனையில் என்ன ஆகாரம் வழக்கமாக சாப்பிட்டார்களோ; அந்த மாமிச ஆகாரம் — அவர்கட்கு ஆரண்யத்திலும் அட்டியின்றிக் கிடைக்கிறது.

ராமன் மாமிசம் சாப்பிட்டதால் யாரும் குழப்ப மடையத் தேவையில்லை என்று ஆச்சாரியார் கூறுகிறார். கூறுவதோடு மட்டுமல்ல; பூஜையிலும் அத்தகைய உணவை வைத்து பூஜித்து உண்பது பாரத தேசத்து பொது தர்மம் — என்றும் கூறுகிறார்.

ஆகவே, இனிமேல் ராம பக்தர்கள் எல்லோரும் துணிந்து, மாமிச ஆகாரங்களை ராமருக்கு படையல் செய்து சாப்பிடலாம். அதை யாரும் தடுக்க முடியாது. மாமிசம் உண்பது குற்றமில்லை என்று ஆச்சாரியாரே கூறி விட்டார்.

ராமருக்கு மாமிசப்படையல் செய்யும் ஒரு கிளர்ச்சி ஆரம்பிப்பது கூட பொருத்தமுடையதாயிருக்கும், யாரும் தடுக்க இயலாது! கூடுமானல், ஆச்சாரியார் சிபார்சில் — பாரத தேசத்துப் பொது தர்மத்துக்கு பங்கம் வாராத அளவுக்கு — மதுத் தடையை நீக்கச் செய்து, மகாவிஷ்ணு அவதாரமான ராமருக்கு மது மாமிசம் இரண்டும் படையல் செய்வது பக்தர்கள் கடமை. பாரத தேசத்துப் பொது தர்மத்தை யாரும் காப்பாற்ற முன்வரலாம்!

ஃ ஃ ஃ

காமுகி

# காதரைன்

உரித்துவைத்தபலாச்சுளை தேனிலே துவைத்து வைத்த திராட்சை, இருந்துமென்ன; காய்ச்சல்காரனின் நாக்கு அதைச் சுவைத்திட மறுக்கிறது!

கனிமொழி மாதரின் கன்னங்களைப் போட்டிக்கு அழைக்கும்புது மலர் ரோஜா -ஆட்டுமதி படைத்தோர் அது இருக்கவேண்டிய இடம்பாவையரின்கூந்தல் என்று நினைக்கின்றனர்! தழைகளைப் போல் மென்றுதான் தின்று விடுகின்றனர்.

நீலவானத்து ராஜபாட்டையில் நட்சத்திரக் கோலமிட்டு உலா வரும் நிலா—இருந்தும் என்ன பயன்? பூவிழுந்தகண்ணினர் அதன் நடையழகையா நவில முடியும்?

இதே கதிதான் ருஷ்யப் பேரரசன் பீட்டர் கோமனுக்குக் கிடைத்த பட்ட மகிஷி காதரைனின் நிலைமையும்! அவனுக்கு அவள் - அந்தகன் அனுபவிக்க முடியாத அழகு உமிழும் ஓவியம்; விதவையின் முன்னே மது சிந்தி, இதழ் விரித்து. மணம் பரப்பும்மலர்க் கொத்து!

பாவம்; ஆண்மையிழந்தவன் அடலேறுகள் உலவிய சபா மண்டபத்திலே — சுழன்றூடும் சாமரங்களின் மத்தியிலே கொலு வீற்றிருந்தான். அந்த பீட்டர் துரைமகனை—பிச்சைக்காரியைப் போல மாற்றுக்கு மூன்றே உடைகளுடன் மாஸ்கோவுள் பிரவேசித்த மங்கை காதரைன், கண்கள் பின்னிய வலை போட்டுப் பிடித்தாள்; நிலை குலைந்தான், மன்னவன்—குலை தள்ளிய வாழை குப்புற வீழ்வதைப் போல் சரச கலைகள் பல கற்ற காதரைனின் கால்களிலே வீழ்ந்து விட்டான் அவன். பின்னர் நல்லதோர் நாளில் காதரைன் பட்டத்தரசியான செய்தி நானிலமெங்கும் பறை சாற்றப்பட்டது. கட்டுக்காவல் மீறி கன்னம் வைத்து கொள்ளை யிட்டு மீண்டவன் நிலையிலே காதரைனும் தன் எண்ணம் ஈடேறியது குறித்து இன்பக் கடலாடினாள்—தனக்கு வாய்த்திருக்கும் அன்பன் ஆண்மையிழந்தவன் என்பது தெரிந்துங்கூட!

கற்கண்டை மெல்ல முடியாத காகம் வேப்பம் பழத்தை நாடுவதைப் போல,கன்னியரின் அங்கங்கள் அடுக்கிக் காட்டும் இன்ப ஏடுகளைப்புரட்டுவதற்கு வலுவில்லாத பீட்டர் மதுச்சாலையின் பக்கம் தன் கவனத்தைத் திருப்பினான். காவல்காரர்களையும் தன் ஏவலுக்குக் காத்து நிற்கும் எடுபிடிகளையும் சேர்த்து வைத்துக்கொண்டு அவன் போதை பருகினான். சில சமயங்களில் மயக்கம் தலைகேற சப்ரகூட மஞ்சத்தில் சயனிக்க வேண்டிய ஜார் மன்னன் ஜில்லிட்ட தரைகளிலே உருண்டு கிடப்பான்! அப்பா என்று அன்போடு தாவி வரும் குழந்தைகளை நோக்கி உன் அப்பா இந்நேரம் உன் அம்மாவை அணைத்தபடி அந்தப்புர[த்]தில் இருப்பான்; போய்ப் பார் என்று எறிந்து விழுவான்!

காதரைனும் அப்படித்தான் ஆகி விட்டாள்! அரண்மனையை வளைக்க வேண்டுமென்ற அவள் ஆசை நிறை வேறியதும், புல்லென்றாலும் புருஷனென்று பூஜிக்க வேண்டிய நிலையையும் மறந்தவளானாள். கண்ணுக்கு அழகு தரும் கட்டிளங்காளைகள் அவள் கட்டிலுக்கு முன்னர் காத்து நின்றனர்.

'செங்கரும்பு கசக்குதடி, உன் செவ்விதழைச் சுவைத்த பின்னர்' என்று அவளது அதரங்களைக் கௌவியபடியே பிரியநாதன் ஒருவன் சொல்வான். இந்தப் புகழுரைக்கு அவன் ஒரு புன் சிரிப்பை பரிசாகவும் பெறுவான்.

உன் அதர முத்திரைகளை அந்த பீட்டர் ஒரு முறையாவது பெற்றிருப்பானா, கண்ணே?—என்று ஒருவன் கேட்டு அவள் கன்னங்களைக் கிள்ளுவான். பீட்டருக்கு முத்திரை போட்ட 'அம்மை'தான் என்றே அவனை விட்டு ஓடி விட்டாளே—என்று உதட்டின் ஓரத்தை அசைய விடுவாள். அவள் எதிரேயிருக்கும் அம்மை வடுக்கள்பதிந்த பீட்டரின் படம் கூட இதைக் கேட்டு வெட்கத்தால் நாணித் தலை குனியும்.

ஆண்மை இழந்துவிட்டானென்றாலும்பீட்டருக்கும்மான உணர்ச்சிஇருக்கிறதே! கொதித்துப் போனான் அவன்; அந்த செறுக்கியின் குடல் கிழிக்காது உறங்கேன் என்று சபதம் போட்டான். இருந்தாலும் என்ன? ராஜ குடியில் பிறந்திருந்திருந்த போதும் காதரைனை அதட்டிக்கேட்கும் துணிவு மட்டும் அவனுக்கு வரவேயில்லை. குமுறிக் குமுறி அடங்கியது அவனது நொந்த உள்ளம்! அன்னிய நாட்டுதூதுவர்களும், அரசியல் தெளிவு மிக்க ராஜதந்திரிகளும் நிறைந்திருக்கும் அவைக்கூடத்திலே விருந்து மண்டபங்களிலே பீட்டர் தன் பட்டமகிஷியை வாய்க்கு வந்தபடியெல்லாம், மூன்றாம்தரமான பாஷையில் திட்டி, தன் நெஞ்சில் நிறைந்துவிட்ட அவமானச் சுமையை இறக்கி எறிந்தான். "அலங்காரம் செய்துகொண்டு ஆள் பிடிக்க வந்துவிட்டாயா? விபச்சார நாயே!" என்று, குழுமியிருக்கும் கோமகன்கள் என்ன நினைத்துக்கொள்வரோ என்பதைப் பற்றிக்கூட சிறிதும் கவலைப்படாமல் பீட்டர் வசைபுராணம் பாடினான். சொந்த விஷயங்களெல்லாம் இப்படி சந்தைக்கு வருவது குறித்து காதரைன் மனம் கலங்கினாள். அவளது சூதுமதியும் இதை ஒழிக்க திட்டம் தயாரிக்க ஆரம்பித்தது.

★ ★ ★

பின்பொருநாள் அந்தப் புரத்தை நோக்கி ஆசைநாயகன் ஒருவன் வேகமாக வந்துகொண்டிருந்தான்."அப்படியே நில்! சொல்வதைக் கேள்!" என்று இடிபோல முழங்கினாள் காதரைன்."நான் சொல்கிறபடி செய்தால்...அன்பா ... ஆயிரம் முத்தங்கள் தருவேன்"என்றாள்

"ஆயிரம் முத்தங்களா? அருகே வராமலா? உன் நிழலை முத்தமிட்டாவது உன் இஷ்டத்தைப் பூர்த்திசெய்வேன், சுந்தராங்கி!" என்று அவன் அவள் மீது பாய்ந்தான்...

"விளையாட்டல்ல கண்ணாளா, பீட்டரைக் கொலை செய்தால்

படாமல் இருந்து விட்டாயே!" என்று மனம் உருகி அவர்களை எல்லாம் மஞ்சத்திற்கு அழைத்தாள் அவள்!

தனக்கு இன்பமளித்த இளவல்களுக்கு பிரதியுபகாரம் செய்து அவர்களை மகிழ்விக்க காதரைன் தயங்கியதே கிடையாது. "குளிரே! மலரே! இதம் தரும் தளிரே! மென்சுகம் தரும் நுரையே! கயல் விழியே! விழிகளின் விருந்தாம் தாமரையே! என்று பலப்பல பட்டங்கள் வழங்கி என்னை சொர்க்கம் சேர்த்த சுந்தர ரூபா! இதோ நான் தருகிறேன், பார்—உனக்குக் கௌரவப் பட்டங்கள்" என்றுகூறி தன் காதலர்களுக்கெல்லாம் அரசாங்க விருதுகளை, உயர் சன்னத்துகளை கேட்காமலேயே வாரி வழங்கினாள்.

மின்னலின் வெட்டே, உயர் தங்கத்தின் குன்றே என என் மேனியின் மெருகைப் பற்றி

**புரட்சியின் பொறிகளாய் லெனினும் ஸ்டாலினும் நடமாடிய ஜாரின் மாளிகை ஒருகாலத்தில் விபச்சார விடுதியாக இருந்த கதை இது!**

தான் நீ அவன் பாரியாளைத் தொட முடியும்"—என்று அவள் கணீரென்று பதில் சொன்னாள்.

கோமளவல்லியின் குரல் கிடைத்ததும் அந்தக் காமுகனும் சும்மாயிருப்பானா? அன்றிரவே பீட்டர் அருந்தும் திராட்சை ரசத்தில் விஷம் கலக்கப் பட்டது. அந்தோ, பரிதாபம்! நஞ்சுக்கும் சாகவில்லை, அந்த நபுஞ்சகன்! பீட்டர் சாகா விட்டால், காரிகைதரும் கட்டில் சுகம் கைமாறிப் போய்விடுமே யென்று கவலை கொண்டான், அந்த கள்ளக் காதலன்! கட்டாறியால் அவன் பீட்டரின் கழுத்தை அறுத்து, கீழே தள்ளினான்—பின்னர் தன் உதடுகளைத் தயார் செய்துகொண்டு அந்தக் கட்டாறியுடனேயே அந்தப்புரத்திற்கு ஓடினான்!

காதரைனே களிப்பிலாழ்ந்தாள். அந்த ரோஜாவைச்சுற்றியிருந்த ஒற்றைமுள்ளும் ஒடிபட்டது குறித்து கள்ளக் காதலர் கூட்டமும் களிப்பிலாழ்ந்தது விழாவை போகங்களுடன் காதரைன் ருஷ்யாவின் ஏகச்சக்கரவர்த்தினியாக முடிசூட்டிக் கொண்டாள். பின்னர் அவளது காமக் களியாட்டங்கள் குறித்து கேட்கவும் வேண்டுமோ?

காமக் காட்டாறு கரை உடைத்து ஓடியது. மதுக்கலயங்கள் உடைபடும் சப்தமும், 'இச்' என்ற ஒலியும், 'தலையணை மந்திரமும்' காதுக்குக் கேட்டால், தாங்கள் அரசியின் அந்தப்புரத்தருகே வந்துவிட்டதாக அரண்மனைக் காவலாளிகள் பேசிக் கொள்வர்.

'கந்தருவ ரூபனே! காளையைப் போல் இருக்கின்றாய்: இதுநாள்வரை என் கன்னிச்

வர்ணித்தாயே; நீ அந்தஉவமைகளைப் பார்த்திருக்க மாட்டாயே; இதோ அவைகளை உனக்குக் காட்டுகிறேன், பார்! என்று சிரித்து தன் ஆசைநாயகன் பால் தங்க நாணயங்களைக் குவித்து, தன் இதழையும் குவித்து நிற்பாள்!

களிப்புதரும் காதலர்களுக்குக்கூட காதரைன் சன்மானம் கொடுத்து வந்தாள். இப்படித்தான் காதலனொருவன் புதிது புதிதாய் சரசமாடி அவளைச் சந்தோஷப் படுத்தத் தவறிவிட்டான். சாகசமாக உடனே அவனை அருகழைத்து, "பிரேமரூபா, இதோ உனக்கு ஒரு புதிய உத்தியோகம் தரப்போகிறேன். இத்தனை நாட்களும் என் இதய ராஜ்யத்தின் மன்னவனாய் இருந்தாயல்லவா ? இனிமேல் நீ போலந்து ராஜ்யத்தின் மன்னவனாயிருக்கலாம்" என்று சொல்லி, மணிமுடி தந்து அவனை போலந்துக்கு அனுப்பிவிட்டாள். தான் ஊட்டிய காதல் ரசம் புளித்துப் போனதால்தானே ராணி தன்னை தூர தேசம் அனுப்புகிறாள் என்பது தெரியாத அந்தப் 'பித்துக்குளி'யும் போலந்துக்குப் போய் விட்டான். அவன் போன பின்னர் காதரைன் புதியதொரு காதலனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள்· பின்னொரு சமயம், அந்தப் பழையகாதலன் மனம் திரிந்தான் என்று கேள்விப் பட்டதும் அவனுடைய சிங்காதனத்தை பிடுங்கி வரச்செய்து அதைத்தன்குளியலறையின் ஆசனமாக உபயோகித்தாளாம்!

இந்தக் காமுகியின் மோகவலைகிரியிலே சிக்குண்டு கருத்தழிந்தவர் பட்டியலிலே முதலிடம் பெறுபவன் கிரிகிரி ஆர்லாப் என்பவன்தான். கிரிகிரி ஆர்லாப்

● தொடர்ச்சி 8—ம் பக்கம்




"புதையல் தொடர்கதை இன்னும் அதிக பக்கங்கள் வெளியிட்டால் என்ன?" என்று கேட்டு ஏராளமான தோழர்கள் கடிதம் எழுதியிருக்கிருர்கள். முரசொலி 12 பக்கங்கள்தான் வெளியிட தற்போது வசதி பெற்றிருக்கிறோம். தொடர் கதையை ஆவலுடன் படிப்பவர்கள் பலர் இருப்பார்கள் என்பதை அறிவோம். அது போல், தொடர்கதையை கடைசியில் சேர்த்துப் படித்துக் கொள்வோம் என எண்ணியிருப்போரும் உண்டு. அவர்கட்கெல்லாம் வேறு செய்திக் கட்டுரைகள், சிறு கதைகள், முதலியன நிறைய பக்கங்களில் வெளிவந்தாக வேண்டும். ஆகவேதான் புதையலை அதிக பக்களில் வெளியிட இயலவில்லை. இரண்டொரு வாரங்களில் பக்கம் அதிகமாக்க முடியாவிட்டாலும், எழுத்துக்களை சிறிய தாக்கி கதையை அதிகமாகத் தர முயற்சிக்கிறோம் என்று கடிதம் எழுதிய நண்பர்கட்கு அறிவிக்கிறோம்.

## அகப்பட்டான் துக்காராம்!

### 11

முதல்நாளிரவு சந்தித்த அந்தக் காதலர்களை கிழவர் காணும்போது, அவர் கண்களையே அவரால் நம்ப முடியவில்லை. தன்னைச்சுற்றி போலீசார் சூழ்ந்திருப்பதையும். அந்த இருவரும் தன்னை அன்போடு நோக்குவதையும் கிழவர், பெரியதோர் புதிராகக் கருதினர். தன் மடியை ஒருமுறை தொட்டுச் சரிபார்த்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசை, அளவு மீறி எழுந்தாலுங்கூட, அவர் அந்த முயற்சியில் ஈடுபடவில்லை. ஏனெனில், கடல் பயணத்தின்போது இப்படித் தொட்டுப் பார்த்ததின் விளைவாகஐயப்பன்விரோதத்தை சம்பாதித்துக்கொள்ள நேரிட்டது. மடியிலுள்ள பொருளும் பறிபோய்விடக்கூடிய நிலைமை பிறந்தது. ஆகவே கிழவர் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு அந்தக் காதலர்களைப் பார்த்து ஒரு வரட்டுச் சிரிப்பு சிரித்தார். அந்தச் சிரிப்பைத் தொடர்ந்து துரை பேச ஆரம்பித்தான். அவர் பக்கம் நெருங்கி அமர்ந்து, "எப்படியிருக்கிறது உடம்பு?" என்று அன்பு சிந்தினன்.

"நன்ருயிருக்கிறது - ஏன்; போலீஸ்டேஷனுக்கு தூக்கிக் கொண்டு போகவேண்டுமோ என யோசிக்கிறீர்களா - பயப்படாதீர்கள். இன்னும் சில விநாடிகளில் எழுந்து மெல்ல மெல்ல நடக்க முடியும் என்னல்!"

என்று கூறிக்கொண்டே துரையின் தோளில் கையை வைத்து அழுத்தியவாறு எழுந்து உட்கார்ந்து கொண்டார் மாயாண்டி.

"நீங்கள் எங்கும் நடக்க வேண்டாம் – போலீஸ்டேஷனுக்கு போக வேண்டியவர்கள் எல்லாம் போய்விட்டார்கள்." என்ருன் துரை.

"ஐயப்பனுக்கு, காப்புப் போட்டுவிட்டார்களாக்கும்!" இது கிழவர்.

"இல்லை, அவனை மன்னித்து அனுப்பிவிட்டோம்!"

"மன்னித்து விட்டீர்களா; அப்படியானல் நீங்கள் எல்லாம் போலீஸ்காரர்கள் இல்லை போலும்!"

துரை மெதுவாக சிரித்தான் எனினும், காட்டிக் கொள்ளாமல், "நாங்கள் போலீசார்தான்! ஐயப்பன் கோஷ்டி, கெஞ்சினர்கள். இனிமேல் இது போல் செய்யவில்லையென்று காலில் விழுந்தார்கள், அதனல் விட்டுவிட்டோம்." என்

"ஓகோ! அப்படியானல் என்னை விடமாட்டீர்கள், ஏன் என்ருல் நான் கெஞ்சப்போவதில்லை!" என்று கிழவர் கம்பீரமாகப் பேச ஆரம்பித்தார். அவர்கள் மட்டும் உண்மையான போலிசாயிருந்தால் கிழவருக்கு சரியான பரிசு கிடைத்திருக்கும் அந்த வார்த்தைகள் வெளிவந்தவுடனேயே! இவர்கள் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டு, தங்களுக்குள்ளாகவே, கிழவரின் தைரியத்தைப் புகழ்ந்து கொண்டார்கள். சிறிது நேரம் அமைதி நிலவியது, தன் எதிரே நிற்கும் அந்தப் பெண்ணை உட்காரச் சொல்ல வேண்டும்போலிருந்தது கிழவருக்கு.

"ஏனம்மா நிற்கிருய்?" என்ருர்.

"பரவாயில்லை" என தழுதழுத்தகுரலில் பதில் சொன்னள் பரிமளம். "உட்காரம்மா!" என்று கிழவர் ஒரே வார்த்தையில் பிடிவாதத்தை உணர்த்தினர். பரிமளமும் அவர் அருகே உட்கார்ந்தாள். கிழவருக்கு இப்போது என்ன பேசுவதென்றே தெரியவில்லை,

முதல் இரவு, இதே மனேராவின் மேலடுக்கிலே, தன்னல் தாக்கப்பட்டு, அவஸ்தைப்பட்ட அந்தக் காதலர்களின் முகத்தைக்காண கிழவர் மிகவும் கஷ்டப்பட்டார். அந்த நிகழ்ச்சியை மீண்டும் நினைவூட்ட வேண்டும் போலவும் இருக்கிறது, நினைவூட்டுவதற்கு சங்கடமாகவும் இருக்கிறது. அந்த என்ன அலைகளால்

அதை கிழவரின் முகத்திலே நன்ருகக் காணமுடிந்தது. துரை-பரிமளம்-இருவராலும்! பேச்சை மாற்றலாம் என்று கருதிய துரை, கிழவரிடம், "ஆமாம்-அந்த ஐயப்பன் யார்? உங்களுக்கு நெடுநாள்பழக்கமா?" என்று கேட்டான்.

"போலிஸ் விசாரணையை இங்கே ஆரம்பித்து விட்டீர்களா?" கிழவர் சிரித்தார்,

"இல்லை-தொந்திரவாக இருந்தால் ஒன்றும் பேச வேண்டாம் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்!"

"ஓய்வு! இந்தப் பழங்கட்டைக்கு இனிமேல்தான் ஓய்வு, ஓய்வுபெற்று, உடலை வளர்த்து உலகத்தை ரக்ஷிக்கப்போகிறேனுக்கும்!"

"உங்களுடைய ஒவ்வொரு பேச்சிலும் உலகத்தைப்பற்றிய சலிப்பு பின்னியிருக்கிறதே! காரணம் என்ன?"

"காரணம் ஏன் கேட்க வேண்டும்; மண்ணை நோக்கி தொங்கிக் கொண்டிருக்கும் சருகுகள், காற்றிலே காம்பொடியும் வரையிலே மரத்தின் வாழ்வைப்பற்றி சலிப்பாகத்தானே பேசிக் கொண்டிருக்கும்"

"கிழவர்களின் சலிப்புக்கும்–உங்கள் சலிப்புக்கும் வித்யாசமிருப்பதாக உணருகிறேன்"

"என்னைப்போல ஒரு கிழவனை இப்போதுதான் பார்க்கிருய், அதனல் அப்படி சொல்கிருய், நீ இதுவரை பார்த்த கிழவர்கள் எல்லாம் பேரன் பேத்திகளோடு வீணே யாடிக் கொண்டிருப்பவர்கள்-

இல்லையே என்று கவலை பட்டுக் கொண்டிருப்பவர்கள்-செத்து சுடுகாடு போகும் போது, நெய்ப்பந்தம் பிடிப்பதற்கு ஆள் இல்லையே என்று ஏங்குகிறவர்கள்— எண்பது தொண்ணூறு ஆண்டுகள் வாழ்ந்து அலுத்துப்போய் இனியும் வாழ வேண்டுமானல் இளமை திரும்ப வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருப்பவர்கள், அப்படிப்பட்ட கிழவர்களைத்தான் நீ பார்த்திருக்க முடியும். நான் அந்தகைய கிழவனல்ல!—நான் ஒரு பைத்தியக்காரக் கிழவன். கிறுக்கிழவன் என்பார்களே; அது யாருமல்ல-நானேதான்!"

துரைக்கு, இன்னும் பேச வேண்டும்போல ஆசையிருந்தது—இங்கேயே நேரம் கடந்து விட்டால் பிறகு பொழுது விடிந்துவிடும் போலீஸ் வேடம் வெளிச்சமாகிவிடும். பரிமளா வேறு இருக்கிருள். ஆகவே, அதை விட்டு உடனே புறப்பட வேண்டுமென்று தீர்மானித்தான்,

கிழவரிடம், "சரி வாருங்கள் போகலாம்." என்று கூறினன். "எங்கே போவது?" என ஆவலாகக் கேட்டார் அவர்.

"எங்குமில்லை-நீங்கள் நினைப்பது போல போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகத் தேவையில்லை இங்கிருந்து பக்கத்திலே புதுப்பட்டினத்தில் எங்கள் வீடு இருக்கிறது. அங்கு போய் இளைப்பாறலாம்."

"ஊஹூம்-நான் எங்கும் வர விரும்பவில்லை."

"இப்படிக் கண்டிப்பாகப் பேசக்கூடாது-நீங்கள் எங்களுடன் புறப்படுவது தான் நல்லது!"

"என்னய்யா வம்பு — சாகப் போனவனை கொண்டுவந்து வைத்துக் கொண்டு, உயிரை வாங்குகிறீர்கள்?"

"நாங்கள் போலீசுள் —எங்கள் கடமையைச் செய்ய வேண்டும்!"

கிழவரும் கண்டிப்பாகவே பேசினர். துரையும் அவரைப் போலவே பேசினன் — அப்படிப் பேசாவிட்டால் கிழவரை, தான் நினைக்கிறபடி அழைத்துக் கொண்டுபோக முடியாது

கொண்டான். பரிமளாவுக்கு கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது, வயதான காலத்தில் அவரைப்போய் தொந்திரவு செய்வது!

"எழுங்கள் சீக்கிரம்!" என்றுன் அதிகாரமாக துரை."

"நான்மட்டும்தான் இளிச்சவாயனு; மற்றவர்களை யெல்லாம் ஏன் விட்டீர்கள்-என்னை மட்டும் பிடித்துக் கொண்டு?"

"உங்களிடம்தானே காரியம் இருக்கிறது."

இந்தப்பதில் கிழவரைத் திணற அடித்துவிட்டது. துரை நினைத்துக் கொண்டு சொன்னது வேருயிருந்தாலும் கிழவர் கலங்கிப் போய் விட்டார். இந்தக் கலக்கத்தில் அவரையுமறியாமல், அவரது கை மடியைத் தடவிப்பார்த்துக் கொண்டது.

"உம்—நான் வரத்தான் வேண்டுமா?"

"ஆமாம்—போலீஸ் உத்திரவுக்கு கீழ்ப்படி வதுதானே நல்லது!"

"இது ஒரு புதிய போதனையா? — 'போலீஸ் உத்திரவுக்கு கீழ்ப்படி' — என்று புதிய ஆத்திசூடியே எழுதலாம் போலிருக்கிறதே!"

கிழவர் நிற்பதற்கு முயற்சி செய்தார். அதற்குத் துரையும் துணை புரிந்தான் — "சிறிது தூரம் நடந்து — அந்தத் தோணிக்கு வந்துவிட முடியுமா?"

"ஓ—மறுபடியும் கடற் பயணமா?— ம் — நானே நடக்கிறேன்"

"கடற்பயணம், அதிக தூரமில்லை – புதுப்பட்டினம் வரையில் தான்!"

"என்னமோ போங்க கள்ளத் தோணியை பிடித்தீர்கள் - ஐயப்பனை அடித்து விரட்டினீர்கள் என்னை இழுத்துப் போகிறீர்கள்— அதுவும் போலீஸ்ஸ் டேஷனுக்கா என்றுல் இல்லை! புதுப் பட்டினத்திற்கு !"

"தலையொன்றும் போய்விடாது வாருங்கள்!"

"தலை மட்டும் போகக் கூடாது அப்பனே! — உயிரோடு என்னை எங்கு தள்ளிப் புதைத்தாலும் எரித்தாலும் கவலையில்லை." என்று கூவினுர் கிழவர்.

"சரிசரி வாருங்கள்!" என்று துரை அவரை அழைத்துக் கொண்டு தோணியிருந்த இடத்தை நோக்கி நடந்தார். பரிமளாவும் மற்றவர்களும் அவர்கள் பின்னே நடந்தனர். தோணியில், முதலில் கிழவரை ஏற்றி விட்டான்-தோழர்கள் அனை

பரிமளா கரையில் நின்ருள்.

"உம்-நீயுந்தான்!" என்று கூப்பிட்டான் துரை. அருகே வந்தாள். அவளையும் தோணியில் தூக்கி தொப்பென்று போட்டான் அவன். துரை ஒரே குதூகலமாயிருந்தான் என்பதை அந்த செயல் எடுத்துக் காட்டிற்று. தோணி, புதுப்பட்டினத்தை நோக்கி, கரையோரமாகவே செல்ல ஆரம்பித்தது.

மறுநாள் காலை பட்டுக் கோட்டையின் கடைத் தெருவிலே வருவோர் போவோரை யெல்லாம் பார்த்து ஒருகுரல், "சக்கரவர்த்தி தெரு எங்கேயிருக்கிறது?" என்று கேட்டுக் கொண்டேயிருந்தது. அது யாருடைய குரலாயிருக்க முடியும்? தங்கப் புதையலைத்தேடும் வெள்ளியம்பலத்தின் குரல் தான் அது!

யாரோ ஒரு கடைக்காரர் அம்பலத்திடம், மிகவும் விபரமாக சக்கரவர்த்தி தெரு இருக்குமிடத்தை சொல்லியனுப்பினுர், அம்பலம் அந்த ஊர் முழுதும் சுற்றி, கடைசியாக சக்கரவர்த்தி தெருவைக் கண்டு பிடித்து விட்டார். பள்ளிக்கூடத்திற்குச்செல்லும் வழி அதுதான்!—அந்தத் தெருவிலே ஒரு வீட்டில் சென்று, "துக்காராம் சைக்கிள் கடை எங்கேயிருக்கிறது?" என்று விசாரித்தார். வீட்டுக்காரர்கள், தெருக்கோடியிலே அந்தக் கடை இருப்பதாக அறிவிக்கவே, வெள்ளியம்பலம் வேகமாக கடையைத் தேடிப் புறப் பட்டார்.

* * *

சிகப்பு, பச்சை, மஞ்சள், கருப்பு, வெள்ளை முதலிய பல வித வர்ணங்களிலே அமைந்த பத்து பதினைந்து சைக்கிள்கள் வரிசையாக வெளியே நிறுத்தப் பட்டிருந்தன. அவைகளில் சில வற்றுக்கு 'பிரேக்' 'இல்லை-ஒரு சில சக்கரத்தைஇழந்தும் நின்று கொண்டிருந்தன. வெளியில் பார்ப்பதற்கு பகட்டான கடை. "துக்காராம் சைக்கிள் கம்பெனி" என்ற பெரிய எழுத்துப் போர்டு, அந்தக் கடை எல்லையையும் தாண்டி வெளியேயும் நீட்டிக் கொண்டிருந்தது.

உள்ளே போடப்பட்டிருந்த இரண்டு மூன்று நாற்காலிகளில் சில நண்பர்களை உட்கார வைத்துப் பேசிக்கொண்டிருந்தான் துக்காராம்.

நல்ல உயரமும், கெச்சலான வடிவமும், அசடுவடியும் முகமும், துக்காராமின் அடையாளங்கள். தன்னைப் படாடோபமாக அழகு படுத்திக் கொண்டிருப்பதாக நினைத்து, அவன் ஒரு மஸ்லின் ஜிப்பா போட்டிருப்பான். அந்த ஜிப்பா, அவன் உள்ளே போட்டிருக்கும் கருப்பு முண்டா, பனியனை வெளியிலே காட்டிக் கொண்டிருக்கும். மெல்லிய நூல் போன்ற ஒரு தங்கச் சங்கிலியும் அவனது நெட்டைக் கழுத்தை அலங்கரித்தது. கையிலே ஒரு நாய்க் குட்டியுடன் கொஞ்சிக் கொண்டு நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தான்,

"என்ன பிரதர்! ஒரே டல்லா இருக்கு லைப்!"-இது துக்காராம்.



"ஆமாம்ப்பா — அவ ஊருக்குப் போனபிறகு, துக்காராம், துக்காராமாக மாறிவிட்டாய்!" இது ஒரு நண்பன்—

"பரிமளா, இந்த தெருவிலே நடக்காம இந்தத் தெருவே பாழாய்ப்போன மாதிரி தெரியுது—பாலைவனமாகக் காட்சி அளிக்குது!"

கூடியசீக்கிரம், உனக்கு பரிமளா பைத்யம் பிடித்தே விடும்!"

"பைத்யம் பிடிக்காவிட்டாலும், பரிமளா பரிமளா என்று கத்திக் கொண்டிருந்தால் திருப்தியாயிருக்கும் போலிருக்குப்பா!"

"அல்லி, அல்லி என்று அர்ச்சுனன் ஒரு கல்லைப் போட்டுத் தேய்த்தானுமே; அது போல நீயும் எதையாவது தேய்த்துக் கொண்டிரேன்!"

"இப்படித்தான் யோசனை சொல்வீங்கடா நீங்க! அர்ச்சுனன் தேச்சது மாதிரி தேயின்னு சொல்றீங்களே தவிர, யாராவது ஒருத்தன் — அந்த அர்ச்சுனனுக்கு உதவி பண்ணின கிருஷ்ணன் மாதிரி எனக்கு உதவி செய்ய வாரீங்களா?"

"அதுசரியப்பா! என்னமோ எங்களால் முந்தது அவள் ஊரைத்தான் விசாரித்துச் சொன்னேம் அவளிடமே உன்னை அழைத்துப் போகமுடியுமா, அல்லியிடம் அர்ச்சுனனை அழைத்துப் போன மாதிரி!"

"ஏன் அழைத்துப் போனல் என்னவாம் —திறமையில் லேன்னு சொல்லுங்கடா!"

"அழைத்துப் போகிறோம்-ஆனுல் நீ, அர்ச்சுனன் மாதிரி, பாம்பாக மாற வேண்டுமே!"

"போங்கடா — போக்கற்றவனுங்களா !—சரி—சரி— நான் கொஞ்சம் கடைத் தெரு மட்டும் போய்ட்டு வர்ரேன்—டேபையா! கடையைப் பார்த்துக்க—அலோ! கையாலாகாத நண்பர்களே! நான் வருகிறேன் சாயங்காலம் பார்ப்போம்-' என்று கூறியபடி துக்காராம், தன் நாய்க்குட்டியுடன் சைக்கிளில் ஏறிப்புறப்பட்டான். சைக்கிள் சிறிது தூரம் நகர்ந்தது. எதிரே, அம்பலம், ஒரு பையனிடம் துக்காராம் கடையை விசாரிக்க, அந்தப் பையன் "அதோஅவரேசைக்கிளில் வருகிருர்!" என்று துக்காராமைக் காட்டி விட்டுப் போய்விட்டான்—

அம்பலம் விரைவாக வந்து, துக்காராமை நிற்கும்படிகையை உயர்த்திக் காட்டினுர் — துக்காராம் சைக்கிளில் இருந்து இறங்கி, "யார் என்ன வேண்டும்" என்று ஆவலாகக் கேட்டான்.

[வளரும்]

Filmed as bound

## சக்கரவர்த்தி. . .

[4-ம் பக்க தொடர்ச்சி]

மறுநாள் காலையில், ராமன், லக்ஷ்மணனை எழுப்பினான் என்று ஆச்சாரியார் எழுதுகிறார். "இது என்ன கூத்து! லக்ஷ்மணன் பதினான்கு வருஷமும் கண் மூடாமல் இருந்தான் என்று சொல்கிறார்களே!" என யாராவது கேட்கிறீர்களா? அதற்கு ஆச்சாரியார் கூறும் சமாதானத்தைக் கேளுங்கள்.

"லட்சுமணன் வனவாசகால முழுதும், சாப்பிடாமலும் தூங்காமலும் விரதம் காத்தான் என்கிற கதை, வால்மீகி ராமாயணத்தில் சொல்லப்படவில்லை."

"ஆகையால் ராமன் எழுப்பியதாக சொல்வதில் முரண் ஒன்றுமில்லை" என அக்டோபர் 10ம் நாள் இதழிலே குறிப்பிடுகிறார். ஆச்சாரியாரைப் பொருத்தவரையிலே முரண் இல்லாமல் இருக்கலாம். ராமாயணத்துக்கு மூலம் வால்மீகி தான்! அதை ஏன் இப்படி முரண்படுத்தி மற்றவர்கள் மாற்றியிருக்க வேண்டும்-வெறும் கற்பனைக் கதைதான் ராமாயணம் என்று கூறுகிறவர்களிடத்திலே நமக்கு வழக்கில்லை — வாதமில்லை—வம்பில்லை!— ராமனைக் கடவுளாக எண்ணும் மக்களிடத்திலே அறிவு விளக்கு ஏற்றி வைக்காமல் பக்தி போதையை அதிகமாக்கும் ராமாயண வெறியர்களைத்தான் கேட்கிறோம், ராம காதை முரண்பாடுடையது என்பதை பகிரங்கமாக ஒத்துக்கொண்டு பேச முன் வருவீர்களா என்று!

இருக்கும் முரண்பாட்டை அவர்களாலும் மறைக்க முடியவில்லை! அதைச் சொல்லிவிட்டுப் பிறகு அதை மழுப்பவும் முனைகிறார்கள்! என்னே மந்த புத்தி! என்னே கொடுமையான போதனைகள்! எந்த நாடும் தாங்காது, இந்த இழிதகையோரை!

ஃ ஃ ஃ

சித்ர கூட மலைப்பக்கம் ராமன் முதலியோர் வந்துவிட்டனர். ராமன் கூறுவதாக ஆச்சாரியார் கூறுகிறார்.

"இந்த மலைப்பிரதேசத்தின் அழகு, பார்க்க பார்க்க வளர்ந்து கொண்டே போகிறது- கிழங்குகளும், பழங்களும் நிறைந்த வனமாக இருக்கிறது, ஜலம் எவ்வளவு சுத்தமாகவும் ருசியாகவும் இருக்கிறது. ரிஷிகளும், ஆசிரம வாசிகளும் இருக்கும் இந்த வனத்தில் நாமும் சந்தோஷமாக இருக்கலாம்."

துவக்கத்தில் கூறியது போலவே, ராமன், சீதை இலக்குமணன் மூவருக்கும் கானக வாழ்வு கசப்பாக இருந்திருக்க முடியாது என்பதற்கு மேலேயுள்ள ராமனின் வார்த்தைகளே சரியான ஆதாரம், அக்டோபர் 10ந்தேதி இதழிலே வந்ததுதான் இவைகளும்!—ரிஷிகளும் ஆசிரம வாசிகளும் இருந்தால் அங்கே நிச்சயம் — அகல்யாக்களும், தாரைகளும் இருந்தே தீருவார்கள். அத்தகைய அருமையான இடத்திற்கு அயோத்தி ராமன் என்ன, எந்த ராமனும் போவார்கள்! தேவேந்திரனே தேடிவந்த இடமாயிற்றே; முனிவர்களின் ஆசிரமங்கள் சாதாரணமானவைகளா?

மொட்டவிழ்ந்த மலர்கள் — கட்டவிழ்த்த காதலோடு —கண் சுழற்றிநிற்கும் காமவேள் நடனசாலையல்லவா அந்த ஆஸ்ரமங்கள்!

சந்திரனின் தாகம் தீர்த்த தாரைக் கொடிகள் படர்ந்திருக்கும்! இந்திரனை இன்பலோகத்திற்கு அழைத்து சென்ற அகல்யாக்கள் பூத்துக் குலுங்கும்! தாண்டவம் புரியும் சிவனையே தவிக்க விட்டு — தாகமூட்டி—மோகந்தீர்த்த தாருகா வனத்து நட்சத்திரங்கள் கண் சிமிட்டி நிற்கும்! அத்தகைய இடத்திலே ராமன், இலக்குமணன், சீதை மூவரும் தங்கிட விரும்பினர்! இலக்குமணன், ஒரு ஆஸ்ரமம் கட்டி முடித்து விட்டான்.

"மால்யவதி நதிக்கரையிலே அவர்கள், இந்திரன் தேவகணங்களுடன் சுவர்க்கத்தில் வசிப்பது போல சந்தோஷமாகக் காலங் கழித்தார்கள்"

அக். 10-ல் தான் ஆச்சாரியார் மேலேயுள்ள கருத்தையும் எழுதியுள்ளார்

இந்திரன் எப்படி வாழ்வான் என்பதைத்தான் எல்லோரும் படித்திருக்கிறோம்-கேட்டிருக்கிறோம்!—அந்த இந்திரனைப் போல ராமன் வாழ்ந்தானாம்— ஆச்சாரியார் கூறுகிறார்.

ஏகபத்தினி விரதனை இந்திரனோடு ஒப்பிடும் அழகே அழகு! மேதையல்லவா ஆச்சாரியார்! ராமபோதையில் தரும் உதாரணம் இப்படித்தான் இருக்கும்!

✶

ஆசிரமம் கட்டிமுடித்த தம்பியை ராமன் பாராட்டுகிறானாம்— அதைக் கம்பர் வர்ணிக்கிறாராம்- ஆச்சாரியார் எழுதுகிறார்; படியுங்கள்!—

"பூவைவிட மெல்லிய பாதங்கள் படைத்த இந்த மிதிலை ராஜகுமாரி, பெருங்காட்டையும் நடந்து தாண்டினாள். அவளுடைய பாதங்கள் செய்த அற்புதத்தைப்போல், தம்பி, உன் கைகள் இந்தத் தச்சு கோத்து வேலையும் செய்து விட்டன."

ராமனுக்கு, இலக்குமணனை திட்டவேண்டுமென்று தோன்றியது போலும்!-அதனால் தான் "ஏ, தம்பி! ஆஸ்ரமம் கட்டி முடித்த உன் கையும் சரி; ஆரண்யத்தில் நடந்துவந்த சீதையின் காலும் சரி!"

என்ற தோரணையிலே ராமன் தம்பியைப் பாராட்டியிருக்கிறான்.

## 'நல்ல புத்திசாலி' நமது பிரசாத்!

✶

உழைப்பை தானம் செய்ய அவருக்கு ஆசை இருக்கிறதாம். ஆனால் உடல் இடம் தரவில்லையாம்! அவ்வாறு உழைத்தும் பழக்கமில்லையாம்! ராஜேந்திரர் சென்றவாரம் ஒரு இடத்தில் பிரஸ்தாபித்துக் கொண்டிருக்கிறார்.

விருத்தாபியத்தை நோக்கி ஊர்ந்து சென்று கொண்டிருக்கும் நமது ராஜேந்திரருக்கு வியர்வையை வடிக்க வேண்டுமென்று ஆசையிருக்கிறது, கண் கெட்டபின் கதிரவனைகாண வேண்டு மென்று துடிப்பவரைப்போல!

பார்ப்பனர்களின் பாதங்களைக் கழுவியவர் அவர், சோமநாதபுரம் ஆலயத்தை பிரதிஷ்டை செய்து வைத்தவர், காஷ்மீரிலிருந்து, குமரிக்கரை வரையிலுமுள்ள திருத்தலங்களுக்கெல்லாம் போய் வந்தவர், அவர் தான் இன்னும் 'மோக்ஷ சாம்ராஜ்யத்திற்கு' வழி தேடுகிறார் உழைப்புதானத்தின் வாயிலாக! முடியவில்லை அந்தமுதியவரால்—அதற்காகத் தான் அவர் ஒரு புது வழியைக் கண்டு பிடித்திருக்கிறார். ஊதியத்திற்கு ஆள் வைத்து அவரை அந்த இயக்கத்திற்கு உழைக்கச் செய்து அதனால் நமது பிரசாத் பலனடைய விரும்புகிறாராம். அவரே தான் சொல்லியிருக்கிறார் இவ்வாறு. என்ன நினைக்கிறீர்கள் நமது பிரசாத்தைப் பற்றி! நல்ல புத்திசாலியா இல்லையா?

## காதரைன் ....

[5-ம் பக்க தொடர்ச்சி]

கிரேக்கக் கடவுளரைப்போன்ற முகப்பொலிவும் காட்டுமிராண்டிகளைப்போன்ற உடல் வலிவும் கொண்ட கட்டிளைஞன். இந்தப் பட்டாளத்து வாலிபனிடம் தான் காதரைன் மோக போதையை புதுப்புது மொந்தையிலே ஊற்றிக் கொடுத்தாள். அழகனாயிருந்த போதும் ஆர்லாப் சில சமயம் அசடனாகவும் நடந்து கொண்டான்; காதரைனுக்குத்தான் ஆர்லாபைப் பிடித்திருந்ததே தவிர, ஆர்லாபுக்கு அவளைக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. காமனின் கூண்டிலே அடைந்து என்னைச் சித்ரவதை செய்கிறாளே, சண்டாளி என்று ஓங்காரக் கூச்சல் போடுவான்; மகாராணியென்றும் பாராமல் காம இச்சையால் மதிமயங்கிநிற்கும் காதரைனை காலாலும், கையாலும் உதைப்பான். ஆனாலும் அவளோ உதைத்த காலுக்கு முத்த மிட்டபடியே அவனிடம் ஊர்ந்து செல்வாள்! பிரும்மாண்டமான மாளிகையும், மலர் வனங்களையும் அவனுக்கு மான்யங்களாகத் தந்தாள். எல்லாம் கொடுத்துமென்ன? முடிவில் ஆர்லாப் பைத்தியம் பிடித்து செத்துப்போனான்.

நாளாக ஆக இந்த மோகனாங்கியின் காமசேஷ்டைகளும் எல்லைமீறின. அழகுமிக்க காளைகளை விரும்பிக் கிடந்தவள் பின்னர் காண்டா மிருகங்களைக்கூட அணைத்து மகிழ ஆரம்பித்தாள். போடெம்கின் என்னும் ஒற்றைக் கண்ணன் அவளது அந்தப்புர வாசியானான், அந்த விகார ரூபனை—மந்தி அலங்காரனை பிரியமனமின்றி, அவனைப்பார்த்து; "உதாரனே, உன் இதழ்களைக் கொடுத்து விட்டுப் போயேன்" என்று அவன் பாதார விந்தங்களைப் பணிவாளாம்! பொட்டைக் கண்ணன் மீது அந்தப் பெட்டைக்கு அவ்வளவு பிரேமை! எனவேதான் லளித சாத்திரமன்றி வேறொன்றுமறியா போடெம்கினை இராணுவத் தளபதியாக்கி மகிழ்ந்தாள்!

இப்படிப்பட்ட ஆபாச அருவி, தன் பேரக்குழந்தைகள் எப்படித் தாவரங்கள் இனவிருத்தி செய்கின்றன என்று கேட்டமைக்காக தாவர நூலையே ஆபாசமென்று தடைசெய்து விட்டாளாம்!

சரித்திரத்தில் முக்காடிட்டு நிற்கும் காமாந்தகாரிகளுள் முதலாமவளாக காதரைன் காட்சிதந்தாலும் கூட, அவள் தன் வாழ்நாளில் ஒரு சிறு துளி கூட மது அருந்தியது கிடையாது. மாறாக, ஒரு பவுண்டு தூளைக்கொண்ட ஐந்து குவளை காப்பியைகாலையில் எழுந்ததும் பருகுவாள். கையளவு பொடியை ஒரே இழுப்பில் மூக்கினுள் அனுப்பிவிடுவாள்!

வயதாக ஆக காதரைன் காற்றடைத்த பலூனைப்போல பெருத்துக் கொண்டே போனாள். கடைசியில் பருமனான உடலைத் தூக்கிக் கொண்டு அவளால் நடக்கக் கூட முடியவில்லை; தள்ளு வண்டியிலே அரண்மனையை உலா வந்தாள்.

விருத்தாப்பிய பருவத்தில் கூட அந்த வெறிநாயின் பண்பினள் பேரன் வயதுகொண்ட வாலிபன் ஒருவனுடன் சோர உறவு வைத்திருந்தாளாம்!

ஃ ஃ ஃ

இவ்வாறெல்லாம் லீலா விநோதங்கள் புரிந்து சொந்த வாழ்க்கை நடத்தியவளைத் தான் சரித்திரம் மகா காதரைன் என்று கௌரவப் பெயர் தந்து அழைக்கிறது.

— மாறன் பி. ஏ. ஹானர்ஸ்




# தீபாவளியாம் தீபாவளி!

## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

அன்று தீபாவளி! ஊரெல்லாம் "டமால்; டுமீல்" என்று ஒரே சப்தம். பட்டாசு வெடிகளின் ஓசைகள்தான் அவை. தீபாவளி ஏதற்காக? நான் இப்படி நினைத்தேன்; சிரிப்புவந்தது. அதே சமயம் தற்செயலாக எதிர் வீட்டைப் பார்த்தேன். அங்கே, ஒரு பல்லுப்போன பாட்டி. அந்த ஆசைப் பாட்டிக்கு ஒரு சுட்டிப் பேத்தி. அந்தப் பாட்டியும் பேத்தியும் பேசிக் கொண்டிருந்தார்கள். நான் கவனித்தேன்.

* * *

"பாட்டி...பாட்டி"

"வாடி என் கண்ணு! என்ன வேணும் சொல்லு!"

"போ பாட்டி. உனக்கு எப்பப் பார்த்தாலும் விளையாட்டுதான் ... கண்ணு மூக்குன்னு!... நான் ஒரு சேதி கேட்க வந்தா...?"

"சேதியா? கேளேண்டி என் ராசாத்தி"

"பதில் சொல்றியா பாட்டி? நாம் தீபாவளி கொண்டாடுறோமே, அது எதுக்காக?... எனக்குத் தெரியலியே! சொல்றியா?"

"காரணமா? அடி தங்கப் பொண்ணே, ஒரு கதையேயிருக்கு!"

"கதையா?...பாட்டி..பாட்டி சொல்லு பாட்டி"

"கேளுடி, கேளு! அந்தக் காலத்திலே..."

"எந்தக் காலத்திலே பாட்டி? கி. பி. யிலியா? கி. மு.விலியா?"

"கி.பியோ—பீபியோ--அதெல்லாம்என்க்குத் தெரியாது...அந்தக் காலத்திலே ஒரு அர்க்கன் இருந்தான்...அவன் பொல்லாத கோபக்காரன். ஒரு நாள் அந்த அரக்கனுக்கும் மகாவிஷ்ணுவுக்கும் சண்டை. அரக்கனுக்கு 'ஓகோ'ன்னு கோபம்வந்துட்டு. உடனே..."

"உடனே என்ன செஞ்சான்? விஷ்ணுவை அடிச்சுட்டானா?"

"இல்லேடி பொண்ணே, இல்லே!...உலகத்தையே பாயா சுருட்டி..."

"பாட்டி...பாட்டி! கொஞ்சம் நிறுத்து. உலகத்தை பாய சுருட்டிட்டானா? ஏ, பாட்டி! நீ கதையாயிருக்கே! உலகத்துக்கு என்ன, உருவம் தெரியுமா? ஆரஞ்சுப் பழம்போல உருண்டை பாட்டி, உருண்டை! நான் பூகோளத்திலே படிச்சிருக்கேனே! அதைப் போயி பாயா சுத்த முடியுமா? நீ பாட்டுக்கு உளறிக்கிட்டே போறியே!"

"நான் ஒண்ணும் உளறலேடி. கதை அப்படி இருக்கு; கேளு! பாயா சுருட்டின உலகத்தோட கடலுக்குள்ளே போயி ஒளிஞ்சிட்டான்...ஏய் ஏய்...ஏண்டி சிரிக்கிறே?...'

"ஐயோ, பாட்டி! சிரிக்காமெ பின்னே என்னவாம்?... கடலும் உலகத்திலே சேந்தது தான், தெரியுமா? அப்படி இருக்கும்போது உலகத்தை எப்படிப் பாட்டி கடல்லே மறைக்க முடியும்?"

"குறுக்கே பேசாதேடி! உலகத்தை கடல்லே ஒளிச்சிட்டானா? உடனே தேவர்கள் எல்லாம் ஓடிப்போயிவிஷ்ணுகிட்ட அழுதாங்க... விஷ்ணுவுக்கு மனசு இளகிப் போச்சு—உடனே வராக அவதாரம் எடுத்து"

"வராக அவதாரமா?—"

"ஆமாண்டி ஆமாம்! அப்படின்னா பன்றி அவதாரம்!... பன்றி அவதாரம் எடுத்து கடல்லே பூந்தாரு..."

"ஏன் பாட்டி? கடல் என்ன சாக்கடையா? பன்றி எங்காவது கடல்லே நீந்துமா பாட்டி? திமிங்கில அவதாரம்—சுறு அவதாரம்—அல்லது, 'சாதாரண 'பாசி' அவதாரமாவது எடுத்திருக்கக்கூடாதா பாட்டி அந்த விஷ்ணு?"

"அடடா! இதெல்லாம் என்னடி கேள்வி! விஷ்ணு அப்படித்தான் செஞ்சாரு. கடலுக்குள்ளே பூந்தாரா? பூந்து, பூமியை மூக்காலே தூக்கிட்டு வந்துட்டாரு. வந்த உடனே பூமியை கிழே விரிச்சாரு. அப்போ அந்த பூமி வராக அவதாரத்தைப் பார்த்துச்சி. பார்த்தவுடனே அதைக் கல்யாணம் பண்ணிக்க ஆசை உண்டாயிட்டு..."

"ஐயோ, ஐயோ! கதையைப் போலத்தான் அந்தப் பொண்ணும் பைத்தியம் போலேயிருக்கு — பன்றியை போயி கல்யாணம் செய்வாங்களா?'

"அதென்னமோடி! கல்யாணமும் ஆச்சு! ஆச்சா? ஒரு பிள்ளையும் பொறந்திச்சி...அந்தப் பிள்ளை...அப்பப்பா! பெரிசா வளர்ந்தப்போ அந்த முரட்டுப் பிள்ளை ஒரு அரக்கனுவே ஆயிட்டு...அந்த அரக்கனோடெ பேருதான் நரகாசூரன். —நரகாசூரன் வெறிபுடிச்சவனு ஆயிட்டான். ஒரே கொலே; கொள்ளைதான்! இல்லாத அட்டகாசமெல்லாம் செஞ்சான்... தேவர்களாலெ அதைத் தாங்கவே முடியல்லே! உடனே நேரா விஷ்ணுக்கிட்ட போயி முறையிட்டாங்க ... விஷ்ணு உடனே "ஆகா! அப்படியா? அவனை ஒழிச்சுடறேன்'னு கிளம்பினுரு. கிருஷ்ணவதாரம் எடுத்தாரு. எப்படியோ நரகாசுரனையும் கொன்னுட்டாரு..."

"கொன்னுட்டாரா?'

"ஆமாண்டி ஆமாம்! ஆனுல் அந்த நரகாசுரன் சாவும்போது ஒரு வரம் கேட்டானும். அதாவது, அவன் செத்த தினத்தை மக்கவெல்லாம் கொண்டாடனும்னு. விஷ்ணுவும் வரம் கொடுத்தாரு. அந்தக் கொண்டாட்டம்தான் தீபாவளி! புரிகிறதா? நரகாசுரன் செத்துப் போன நாளைத்தான் நாமெல்லாம் சந்தோஷமா..."

"கதை போறும் பாட்டி! நிறுத்திக்கோ! கதையாம் கதை! இந்த ஜனங்களுக்கு மூளையே இல்லே பாட்டி!"

"அடி புத்திசாலிக் குஞ்சே! என்னுத்தைக் கண்டுட்டேடி!"

"பின்னே என்ன பாட்டி! நீ சொன்ன கதையை யாரு நம்புவா? ஒரே குப்பைக் கதை! பைத்தியக்காரக் கதை! இதையும் நம்பி பண்டிகை கொண்டாடுறுங்களே, அவங்கமூளையையெல்லாம் எங்கேதான் வாடகைக்கு விட்டாங்களோ...?"

"என்னடி உளற்றே?"

"உளறலே பாட்டி! அந்த நரகாசூரனை கொனனுப்பிலே இந்தத் தீபாவளியையும் கொன்னுடனும்!'' என்றுள் அந்தச் சின்னப்பெண், மறுகணம் பாட்டியின் மடியிலிருந்து எழுந்தாள். ஓடிவிட்டாள்

★ ★ ★

நான் அந்தத் தங்கப்பாப்பாவை வாழ்த்தினேன். பள்ளிக்கூட விடுமுறை-புதுசட்டை - பட்டாசு சப்தம்—பட்சண வகை இதுதான் தீபாவளி என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பீர்கள். இந்தப் பொல்லாத ஆசையெல்லாம் நம்மை 'முட்டாளா'க்கி விடுகிறது! ஆகவே அந்தத் தீபாவளி நமக்குவேண்டவே வேண்டாம்; சரிதானே!

## சிறிய வயதிலே

### கிழவனுக்கு உதவிய குட்டி ராஜா!

அழகான தோட்டம்—அதுஅரண்மனை நந்தவனம். அதில் விளையாடிக் கொண்டிருந்தான் ஒரு சிறுவன்—அரசரின் மகன்— பத்து வயது குட்டிராஜா!

விளையாடிக் கொண்டிருந்த தம்பி திடுக்கிட்டு நின்றான். அவனை திகைக்க வைத்தது என்ன தெரியுமா? தோட்டத்து வாசலில் தோட்டக்கார கிழுவன் அழுது கொண்டு உட்கார்ந்திருந்தான். உடனே இளவரசன் அவனிடம் ஓடினுன். அழகைக்குக் காரணம் கேட்டான். "இளவரசே! நான் கிழவனுய்ப் போய் விட்டேனும். ஆகவே என்னை வேலையை விட்டு நீக்கப் போகிறாராம் அரண்மனை அதிகாரி...இனி என் பிள்ளை குட்டிகள் எப்படி பிழைக்குமோ?..... அதை நினைத்தால் அழுகை வருகிறது!'' என்றான் கிழவன்.

இளவரசனுக்கு மனம் இளகி விட்டது. கிழவனுக்கு ஆறுதல் சொன்னுன். நேராக அரண்மனை நிர்வாகியிடம் சென்றான். நிர்வாகி கிழவனை நீக்கி விட்டதாகச் சொன்னுர். அவ்வளவுதான்; இளவரசனுக்கு பொல்லாத கோபம் வந்துவிட்டது,

"இதென்ன அக்ரம்ம்? இத்தனை வருஷங்கள் நம்மிடம் வேலே பார்த்த அவனை, இப்போது தள்ளாத வயதில் வெளியே துரத்தலாமா? அவன் எப்படி பிழைப்பான்? அவனுல் வேலேயே செய்ய முடியா விட்டாலும் அவனுக்கு சம்பளம் கொடுக்கத்தான் வேண்டும். இது பட்டத்து இளவரசன் உத்தரவு! ஆமாம்!'' என்று சத்தம் போட்டான்.

அதிகாரி நடுநடுங்கி விட்டார். அன்றே, கிழவன் மறுபடியும் வேலேக்குத் திரும்பினுன். இளவரசனும் அந்தக் கிழவன் வீட்டுக் குழந்தைகளுக்கு மிட்டாய் பரிசுகள் அனுப்பினுன்.

இப்படி சின்ன வயதில் ஏழைகளின் மேல் இரக்கம் கொண்டிருந்த குட்டி ராஜா யார் தெரியுமா? அவன்தான் பதவிக்கு வந்ததும் பண்பை மறந்த ஆடம்பரவாதி —அதனுலேயே இரண்டாண்டுகளுக்கு முன்பு நாட்டை விட்டு விரட்டப் பட்ட எகிப்திய மன்னன் பரூக்!

## பெரிய மனிதர்கள்



கவிஞர் சுரதா

இளைத்த நிலா முளைத்திருக்கும் இரவு நேரம்.
எதிர்வீட்டில், இளஞ்சிறுமி அண்ணனோடு,
சுளைத்தமிழ்நூல் வாசித்துக் கொண்டிருந்தாள்.
சேவலைப்போல் எழுந்திருக்கும் முத்தன்; வீட்டு
வெளித்திண்ணை மீதமர்ந்து, நீல வானை,
விழியாலே தொட்டுக்கொண் டிருந்தான். பச்சைக்
கிளிப்பேச்சுக் குரலாலே, "அத்தான்" என்று,
கூப்பிட்டாள் அவன்மனைவி, உள்ளே சென்றான்.

★

குளம்வளர்க்கும் தாமரைப்பூ அழகி, தன்னைக்
கொத்துகின்ற வாலிபனைப் பார்த்து, "அத்தான்,
விளக்கினிலே எண்ணெயில்லை. உண்ப தற்குள்,
வண்டுநிற மாகிவிடும், வீடு' என்றாள்.
ஒளிவீசும் உன்வதனம், உதடு, பார்வை.
விரல்ஒடு என்றழைக்கும் நாங்கள், யாவும்;
கிளைவிளக்கு போல் வெளிச்சம் கொடுக்கும், "யானைக்
கொம்பே,நீ குடித்திடநீர் தருக" என்றான்.

★

நீர்தந்தாள். அதுதந்து, முகத்தி னாலே
நிலாவெளிச்சம் தந்திட்டாள், வீட்டுக் குள்ளே.
கூர்விழியால், மௌனமொழி தந்தாள், பின்னர்க்,
கொஞ்சுகின்ற வேலைசெயும் இதழ் திறந்து,
"கார்காலம் வந்த"தென்றாள். முத்தன், கேட்டுக்,
"காதலர்கள் வசிக்கின்ற இல்லந் தன்னில்,
போர்வைஇனி விலைபோகா' தென்றாள். மங்கை,
"பொங்கலுக்கும் கரும்பு,விலை போகா" தென்றாள்.

★

"பட்டாடை, பணியாரம், புது விருந்து,
பனையூரில் காத்திருக்கும் நமக்கு! நேற்று.
சுட்டேனே பலகாரம்; அதனைப் போல,
சுட்டிருப்பர் தாய்வீட்டில். வெண்பு றாவின்,
முட்டையைப்போல் வடிவுதனைக் காட்டு கின்ற
வரகரிசி யால்செய்த அதிர சங்கள்,
எட்டடுக்கு வைத்தாலும் தின்பேன். உங்கள்
இதழ்போல இனிப்பாக இருப்ப தாலே!

★

சனிக்கிழமை இந்நேரம், என்தாய் வீட்டில்
சங்கீத இரவுதனைக் கழிப்போம் "கொய்யாக்
கனிகொத்தும் கிளிப்பிள்ளை, மீண்டும் நம்மூர்க்
கனியோடு வந்ததுபார்! என்று, அந்தப்
பனையூரே நமைப்பார்த்துப் பேசிக் கொள்ளும்
பாருங்கள்" என்றிட்டாள். உடனே முத்தன்,
"இனிமைதரும் மாம்பழமே! உன்தாய் ஊர்க்கு,
ஏனிந்தப் புதுப்பயணம்? என்று கேட்டான்.

★

"தலைத்தீபா வளியன்றோ நமக்கு!' என்று
தமிழச்சி, சுவையோடு சொன்னாள். "முன்னாள்,
கொலைபட்ட நரனேநம் இனத்தான். அன்னோன்
குன்றுபோல் வீழ்ந்திறந்த கண்ணீர் நாளில்,
இலைபோட்டுப் படைத்திடுதல் சரியா? அன்றி,
இறந்ததற்கு அழுதிடுதல் முறையா?" என்று,
சிலைபோல நின்றவளை முத்தன் கேட்டான்.
சோலைமலர் போல்மங்கை ஊமை யானாள்.

★

இரணியனைத் தூணுக்குப் பின்பக் கத்தில்
இருந்தபடி, கொன்றானே கோழை; அந்தப்
பரந்தாமன் என்கின்ற கறுத்த பார்ப்பான்,
பத்தினியின் உதவியினால், நரனைக் கொன்று,
இருகூறு செய்திட்டான், சூழ்ச்சி யாலே!
"என்நாடே! வேதியனை வீழ்த்து!" என்று,
விரிந்தமணல் காவிரிநீர் போல, மக்கள்
[illegible]

நம்வீட்டில் யாரேனும் இறந்து விட்டால்
நடுங்காமல் போய்விடுமா நமது தேகம்?
கம்மாதா நமதுகுரல், துக்கத் தாலே!
கலங்காதா நமதுள்ளம், சாவுக் காக.
இம்மென்னும் ஓசைதரும் மழைநீர் போல,
இருவிழியும் அழுவதற்கு மறந்தா போகும்?
செம்மையுள ஓர்தமிழன்;நரகன்; செத்த
தேதிக்கு மட்டும்ஏன் இக்கொண் டாட்டம்?

★

நரனென்போன் அரக்கனல்ல, அரசன்! அன்னோன்,
நற்றமிழ்க்குப் பெருந்தொண்டு புரிந்தோன். யாகம்
புரிந்திட்ட ஆரியரின் சிரம் அறுத்துப்
போர்ப்பொழுது போக்கியவன். உலக வீரன்!
ஒருசிங்கம் தலைமீது, காலை வைத்து,
விரோதிகளை அதட்டிவைத்து, நீதி வைத்து,
வரிநெல்லிக் காய்போல விழி அமைந்த,
முயல்வாழும் வெண்முல்லை நாட்டை ஆண்டோன்!

★

நாமெல்லாம் அவன்இனத்தார். இன்னும் சொன்னால்,
நாடாண்ட ராவணனின் வம்சம். 'வாழ்வில்,
காமத்துப்பால் வேண்டாம், மோட்சம் காண,
காவிஉடை அணியுங்கள்' என்று, மக்கள்;
சேமத்தைச் சாகடிக்கும் பார்ப்பான் பேச்சைச்
சிதறடித்த வள்ளுவரின் சுற்றத் தார்நாம்.
சோமமெனும் மதுகுடித்த மிலேச்சர் தம்மைச்
சுடுகாட்டுக் கனுப்பியவர், நமது முன்னோர்!

★

கானகத்து வேங்கைதனைப் பிடிப்ப தற்குக்
கற்பலகைக் கதவமைப்போன் தமிழன். பெண்ணைக்
காணட்டும் என்கின்ற நோக்கத் தோடு;
கண்ணாடிக் கதவமைப்போன் பார்ப்பான், வாழ்வில்;
மானத்தைக் கவரிமான் போலக் காத்து
வருகின்ற தனிக்கூட்டம், தமிழர்க் கூட்டம்!
தேனற்றுப் போய்விடினும், தமிழைக் கொண்டு
தித்திப்பு விருந்துவைப்போன் தமிழன் ஆவான்.

★

பகைதூண்டும் பார்ப்பனர்கள், இதனை எல்லாம்;
பொய்என்பர். உண்மைக்குத் திரும்ப மாட்டார்.
மிகஉணர்ந்த பேரறிஞர், எதுசொன் னாலும்,
மடையருக்கு ஏறாது. அரும்பில், காற்றுப்
புகுவதற்கு வழியில்லை அன்றோ? நம்மில்,
பகுத்தறிவு, இனஉணர்ச்சி, இரண்டும் அற்றோர்,
சகித்தபடி, கரிநாளை வாழ்த்து வார்கள்.
சுரணையுள்ள திராவிடர்தான் கலங்குவார்கள்"

★

என்றுரைத்தாள். இதுகேட்டு அந்த மங்கை
இறந்தவனோ நம்இனத்தான். நற்கு ணத்தான்.
கொன்றவனோ ஓர்பார்ப்பான், அவனுக் காகக்
கொண்டாட்டம் நம்மவரால்! வெட்கம்! வெட்கம்!
நின்றுவிட வேண்டும்இந்த நிகழ்ச்சி. நம்மோர்,
நிறுத்திவிட வேண்டும்இந்தத் திருநாள் தன்னை,
என்றுரைத்தாள். ஆவேசத் தோடு. முத்தன்
எக்களித்து, வஞ்சிக்கு வாழ்த்து சொன்னான்.

★

எழுந்திட்டாள் அவ்விடத்தை விட்டு, மங்கை.
இளையோனும், அவளோடு எழுந்தான். பின்னர்.
பிழியாத கனிகேட்டாள். கன்னம் தந்தாள்,
படராத கொடிகேட்டான். இடையைத் தந்தாள்.
"தழையில்லா மூங்கில்தனைத் தருக" என்றான்.
தங்கநிறத் தோள்தனைத் தந்தாள். தந்து,
மழைக்காலம் வருவதற்கு முன்னே, முத்தன்;
வரவழைத்த உயிர்ப்போர்வை அவன்மேல் வீழ்ந்தாள்!




# (20) — புதுமைப் பித்தர்

தூக்குமேடை!

சமூகத்தின் விஷப் பூச்சுகளாம்—வஞ்சக நெஞ்சம் கொண்டோரின் வாழ்வுக்கு சமாதி கட்டும் மரண மேடை அது! உண்மைதான். ஆனால், அன்றொருநாள், ரஷ்ய மாமண்டலத்தில், அத்தகைய பலி பீடம் ஒன்றில்,சாவுக்குழியில் தள்ளப்படுவதற்காக அணி வகுத்து நிறுத்தப்பட்டிருந்தது ஒரு வாலிபப் பட்டாளம். கூட்டாக பவனிவந்த கொள்ளையர் படையோ என்று கருதலாம். ஆனால் அத்தகைய தீயநெஞ்சம்கொண்டவர்கள் அல்ல அவர்கள். நெஞ்சத்திலே ஈரமும், அந்த ஈரத்திலே "தவிக்கும் தாயகமே! பணம் படைத்தோரின் பாதங்களிலே, கொடுமையின் உற்பத்திப் பொருளாம் மன்னன் என்ற மதோன்மத்தனின் சுட்டுவிரல் அசைவிலே சுருண்டு கிடக்கும் உன் மானத்தை மீட்டே தீருவோம்!" என்ற ஜீவ உரிமையும் பெற்றவர்கள். அந்த உரிமையின்பால் கொண்ட பாசப்பிடிப்புதான் அவர்களை தூக்குமேடைக்கு துரத்திவிட்டது. அவர்கள் புரட்சி வீரர்கள்!

அந்த மரண ஓலை எற்றோருக்கு மத்தியில் ஒருவன்-வாழ்க்கையை அவ்வளவாக சுவைத்திராத ஒரு பரிதாபத்திற்குரிய வாலிப வயதினன் நின்று கொண்டிருந்தான். "சாகப் போகிறோம்" என்ற சஞ்சலம் இல்லை அவன் நெஞ்சில். "நாட்டின் நிலைகண்டு கொந்தளிக்கும் கடலலையென குமுறிய என் உள்ளத்திற்கு அமைதியைத் தேடினேனே, அந்த அமைதி—எங்கும் கிட்டாத இன்ப அமைதி, என் மரணத்தில் கிடைத்தேவிடும்" என்ற நினைவு ரேகைகள் மின்னிக் கொண்டிருந்தன அவன் முகத்தில்.

நேரம் கடந்தது. நண்பர்கள் சிலரின் உயிர் மூச்சுகள் காற்றோடு கலந்தன. அவன் கட்டம் நெருங்கியது. எத்தனையோ மேடைகளில் "சூதுமதியினரின் சோகத் தர்பாரை சுட்டுப் பொசுக்குவேன்" என்று முழக்கமிட்ட அவன், அதே ஆட்சி பீடம் எழுப்பியிருந்த தூக்கு மேடையில் ஏறி நின்றான், தன் உயிரைப் பொசுக்கிக் கொள்ள! சாவுக்கும் வாழ்வுக்கும் இடையே சிறிதுநேர இறுதிப் போராட்டம். அந்த நேரத்திலும் "வெற்றி எனக்கே!" என்று முணுமுணுத்தது எங்கேயோ முடங்கிக் கிடந்த வாழ்வு! முடிவில் நேர்ந்தது என்னவோ அதுதான். மரணத்தின் கோர வாயிலுக்கு சென்றுவிட்ட அவனை, இழுத்து நிறுத்தியது எங்கிருந்தோ பறந்து வந்த ஜார்மன்னனின் உத்தரவு. "மரணம்வேண்டாம்; சிறையே போதும்" என்ற அந்த'நிமிஷ' உத்தரவு அவன் உயிருக்கு 'புது வாழ்வு' தந்தது.

சாக வேண்டிய அவன் சைபீரியாவுக்கு விரட்டப் பட்டான் சிறைப் பறவையாக!

★ ★ ★

"ஏழை மக்கள்'

இந்த எழுத்துக்கள்தான் — இந்த எழுத்துக்கள் உள்ளடக்கிய கருத்துக் கோர்வைகள் தான்—அந்த வாலிபனின் முதல் நாவல்தான் அவனை மரண மேடைக்கு அழைத்தது. செல்வம் படைத்தோரின் சொந்த விருப்பத்திற்கு நாட்டை விட்டுவிட்டு, சுந்தராங்கிகளின் சோபித உடல்களோடு, மது ஊட்டிய புது சுகத்தோடு பின்னிக் கிடந்த 'ஜார்' ஆட்சியின் வீழ்ச்சியை "வா" என்று அழைத்தது அந்நூல். அதற்குப் பரிசுதான் மரணம்!

அவன் ஒரு எழுத்தாளன். ஆகவே எழுதினான். எழுத்துக்கள் எண்ணத்தைத்தானே பிரதிபலிக்கும்? ஏனெனில் அவன் எழுதியது கூலிக்கு அல்ல; கொள்கைக்கு!

கட்டவிழ்த்த கன்று தாயைத் தேடிப் பாய்வது இயற்கை; மடை திறந்த வெள்ளம் சீறிப் பாய்வதிலும் வியப்பில்லை. அந்த இயற்கை வெறிதான் அவனது "ஏழை மக்களி"ன் ஒவ்வொரு எழுத்திலும் பளிச்சிட்டது. அவன் எழுதுபவன் மட்டுமல்ல; செயல் வீரனும்கூட. மன்னராட்சிக்கு எதிராக மலர்ந்திருந்த புரட்சி இயக்கத்தில் அவனும் ஓர் அங்கம். ஆகவே தான் சட்டத்தின் கொள்ளிக் கண்கள் அந்த ஏழையை வட்ட மிட்ட வண்ணம் இருந்தன.

★ ★ ★

உலகத்தின் ஒவ்வொரு மூலையிலும் இலக்கிய மேதைகள் தோன்றினார்கள்; தோன்றுவார்கள். ஆனால், அவர்கள் பிறவி எடுத்ததன் பயன், ஆண்டவனுக்கு ஆலவட்டம் சுற்றுவதிலும், மன்னர் குலத்து மகிமையை எழுத்தாக்கிக் காட்டுவதிலும் விரயமாகிறது. ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டில் ரஷ்யமாதா பெற்றெடுத்த அறிஞர்கள் அத்தனை பேரும் தன் தாயகத்தின் வெற்றிக்கே உழைத்தார்கள்! மக்களை மதியாத மன்னர் பரம்பரைக்கு மரணகீதம் பாடியே சென்றார்கள்!

சோவியத் நாட்டின் அரசியல் வானிலே நீதியை விழுங்கிக்கொண்டு கருமேகங்கள் சூழ்ந்து கிடந்த நேரம்— தட்டுத் தடுமாறி எழ முயற்சித்த இலக்கியச் சிசுவை, அரசியலார் தலையெடுக்க விடாது தடுத்துக்கொண்டிருந்த சமயம் — அப்போது ரஷ்யாவில் தோன்றிய புரட்சி எழுத்தாளர்களில் ஒருவன்தான் தூக்கு மேடையிலிருந்து தப்பிய அந்த இலக்கியச் சுரங்கம்—டாஸ்டாவஸ்கி!

★ ★ ★

அறிஞர்கள் பலரை அறிமுகப்படுத்தி வைக்கும் உலகம், அவர்களுடன் ஏழ்மையையும், வறுமையையும் இணைத்தனுப்புவதில் ஏனோ பெருமை அடைகிறது! ஐந்து குழந்தைகளைப் பெற்று அவதிக்காளான தந்தை-இதயமில்லாத ஏழ்மை வீசி எறிந்த துன்பச் சுமைகள் — இந்த சோகத் தொடக்கத்தோடுதான் அவனது வாழ்வுக்கதை ஆரம்பமாகிறது.

இருபத்தோரு வயது வரை பள்ளி மாணவன்—பின் இரண்டாண்டுகள் தொழிலாளி—அதன் பிறகோ வாழ்நாள் முழுவதும் ஏழை எழுத்தாளன் — இதுதான் அந்த கலைஞனின் வாழ்க்கைப் பட்டியல்!

எழுத்துத் திருடர்களையும், கருத்துக் கள்ளர்களையும், இலக்கிய துரோகிகளையும், "நானும் ஓர் மேதை" என்று கூறித் திரிபவர்களையும் இன்றைய காவிய உலகம் ஏனோ ஏற்றுக் கொண்டு விடுகிறது. ஆனால், அன்றைய நிலை வேறு! எழுத்துக்களை எடைபோட்ட பிறகுதான்—கருத்துக்களை உரசிப் பார்த்த பின்புதான் அறிஞன் என்பானை, "வருவாய்" என்று அழைத்தது அன்றைய உலகம்.

இலக்கியம் கடைப்பிடித்த அந்த இலக்கணத்திற்காளானவன்தான் டாஸ்டாவஸ்கி. இரவை பகலாக்கி — கரத்தை இயந்திரமாக்கி — மூன்றாண்டுகள் இடைவிடாது எழுதி எழுதிக் கிழித்த பிறகுதான் அவனது "ஏழை மக்கள்' நாட்டின் நல்வாழ்த்தை ஏற்றது; அவனை ஒரு கலாமேதை யாக்கியது.



விடுதலை வேட்கை கொண்டவர்கள் கலைஞர்களானாலும் அவர்களை சும்மா விடாது அன்றைய ஆட்சி சட்டம். ஆகவே, டாஸ்டாவஸ்கியை நோக்கி புருவங்களைநெறித்தது புதுப் பார்வை வீசியது. அரண்மனையின் ரத்த ஏட்டிலே 'அபாய மனிதனாகப்' பொறித்தது. அந்த எதிர்ப்பின் எல்லைதான் அவனை சைபீரியாவுக்கு விரட்டியது.

★ ★ ★

துன்பச் சுரங்கம் சைபீரியாவில் அவன் நான்காண்டுகள் அவதிப்பட்டான். இரத்த வியர்வை சிந்தி மிருகமாக உழைத்தான். அவனது இலக்கிய வெறிக்கு அன்றைய தான்தோன்றி அரசாங்கள் வாரி வழங்கிய பரிசு அது மட்டுமல்ல; சைபீரியா வாசத்தின் மூலம் ஒரு தீராத வியாதியையும் தேடித்தந்தது. 'காக்காய் வலிப்பு' என்ற பயங்கர நோய் அவனை விடாமல் பற்றிக் கொண்டது

நான்காண்டு சிறை வாசத்திற்குப் பிறகு மீண்டும் தாயகத்தில் அடியெடுத்து வைத்தான் டாஸ்டாவஸ்கி, அதே காவியப் பித்தனாக — இலக்கிய வெறியனாக. ஓய்வுபெற்ற அவனது கரங்கள் மீண்டும் உழைக்கத் தொடங்கின. அந்த இடைவிடாத இருபதாண்டு உழைப்புதான் புகழ் முத்துக்கள் பலவற்றை உதிர்த்தன.

★ ★ ★

குற்றமும் தண்டனையும்: சோபித வாழ்வுக்காக அல்ல; செத்துக் கொண்டிருந்த மானத்தைக் காக்க கொலை செய்கிறான் ஒரு ஏழை. ஆனால் நெஞ்சம் தரும் வேதனை; மனசாட்சி தொடுத்த பாணம் — இவைகளைத் தாங்கமுடியாத அவன், வழக்கு மன்றத்தைத் தேடி ஓடுகிறான். குற்றத்தை ஏற்று தண்டனை அடைகிறான். 900 பக்கங்கள் கொண்ட அந்த நீண்ட நாவல் டாஸ்டாவஸ்கியின் முயற்சியின் கலசம்!

கார்மஸாவ் சகோதரர்கள்: மாறுபட்ட கருத்துக்களைக் கொண்ட ஐவரின் சோகக்கதை சொல்லும் ஒரு குடும்பச் சித்திரம். பத்தாண்டுகளில் பாதியே முடிந்த அப்பெரிய நவீனம் ஒரு தீட்டப்படாத வைரம்.

முட்டாள்: இது அன்றைய மன்னராட்சிக்கு ஜாடையாகக் கொடுத்த சவுக்கடிநாவல்!

மனோதத்துவ அடிப்படையில் இம்மாதிரியான பல நவீனங்களை எழுதிக் குவித்த டாஸ்டாவஸ்கியின் கரங்கள் ஒருநாள் ஓய்ந்தன. சிறைவாழ்வு தந்த பெரும் நோயான காக்காய் வலிப்பு அவனது உயிரை சூறையாடியது.

★ ★ ★

டாஸ்டாவஸ்கி மறைந்தான், தன் எழுத்துக்கள் வடித்துக் காட்டிய தாயக விடுதலையைக் காணுமுன்பே! ஆனால் அவனது எழுத்துகள் இட்ட கட்டளைப் படி 'சம்மட்டி' தூக்கியவர்கள் அந்த விடுதலை பூமியை எட்டத்தான் செய்தார்கள்!

★

29.10.54

# கடைசிப்பக்கம்

(?) நான் இறந்த நாளே, எண்ணெய் தேய்த்து — புத்தாடை கட்டி கோண்டாட வேண்டுமென்று நரகாசூரனே கேட்டுக் கோண்டான் என்கிறபோது, ஒரு தமிழரசனின் கோரிக்கையை நாம் நிறைவேற்றினால் என்ன?

அவன் கேட்டுக் கொண்டான் என்று ஆரியர்கள் எழுதி வைத்தது தானே தோழரே!—

"பரந்தாமன், பாவி நரகாசுரனைக் கொன்ற நாளை பார் முழுதும் கொண்டாடுவோம்" என்று பார்ப்பனர்கள் கூவியிருப்பார்கள், இப்போது நாம் எதிர்ப்பது போல, அப்போதும் தொகையில் இவ்வளவு இல்லாவிடினும்—ஆர்வத்தில் குறையாத திராவிடர் பலர், அந்தக் கூச்சலை எதிர்த்திருப்பார்கள். உடனேதான் ஆரியர்கள் நரகாசுரன் புராணத்திற்கு ஒரு முடிவுரையை அவசரமாக சேர்த்து, நரகாசுரனே கேட்டுக் கொண்டான் என்றும் அவன்கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்றும் புளுகித் தள்ளிவிட்டார்கள். அவனே கேட்டுக் கொண்டான் என்றால் தானே அவன் இனத்தார் ஏமாந்து போய் தீபாவளி கொண்டாடுவார்கள்.

ர. சண்முகசுந்தரம் ஊத்தங்கரை.

(?) நேரு பதவியை விட்டு விலகப் போவதைக் கேள்விப்படும் அயல் நாட்டுத் தலைவர்கள் என்ன நினைப்பார்கள்?

விலகும் தேதி — தங்களுக்கு முந்தியதாயிருக்குமா? பிந்தியதாயிருக்குமா? என்று நினைப்பார்கள்.

மு. ராசலிங்கம் தாத்தையங்கார் பேட்டை.

(?) திராவிடத்தை, காந்திய முறையில் பெறப் போகிறீர்களா? அல்லது கம்யூனிச முறையிலா?

கம்யூனிச தத்துவங்களுடன் காந்தியின் பாதையில் நடந்து திராவிடத்தைப் பெறுவோம், இன்னும் விளக்கம் தேவையானால், தி. மு. கழகந்தான் உண்மையான கம்யூனிஸ்டுக் கட்சி என்பதை பலமுறை தெளிவாக்கியிருக்கிறோம், காந்தியின் பாதை என்பது, உயிரைப்பற்றிக் கவலைப்படாமல் கொண்ட கொள்கைக்குப் போராடுவதாகும்!

லோ. பாலகிருஷ்ணன், தட்டச்சேரி.

(?) சூன்யமாயிருக்கும் பிரதேசத்தில் சந்திரமண்டலப் பிரயாணம் எப்படி சாத்தியமாகும்?

தேவையான காற்று, நீர், முதலியவைகளை தாங்கள் செல்லும் விமானத்திலேயே கொண்டு செல்லலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

மா. பாலசுப்ரமணியன் பாலமேடு,

(?) வடமொழி சொற்கள் தமிழ் மொழியில் வந்து வழங்குவது எப்படி?

தமிழகத்தில் வடவர் குடியேறி சுரண்டவில்லையா? – அது எப்படியோ - அப்படித்தான் இதுவும்!

வீ, சேவுகப் பெருமாள். சிங்கம் புணரி-

(?) "கொள்கை வளருது கோபுரம் போல்" என்கிறீர்களே; கோபுரம் வளருமா?

"புயல்போலப் பேசினான்" என்றால் "புயல் பேசுமா" என்று கேட்கலாமா?




மு. கருணாநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்படுகிறது.
அலுவலகம்: 62. எஸ். பி. சன்னதி தெரு, ராயப்பேட்டை, சென்னை—14.